# புதிய ஜனநாயகம்

டிசம்பர் 2015
ரூ.10.00



## ‘அம்மா’: தமிழகத்தின் பேரிடர்!

# நிவாரணப் பணியில் மக்கள் அதிகாரம்



பருவமழையை எதிர்பார்த்து ஏரி, குளங்களைத் தூர்வாரி பராமரிப்பது; வெள்ள வடிநீர் கால்வாய்களை பராமரிப்பது உள்ளிட்டப் பணிகளை புறக்கணித்தது மட்டுமின்றி, வானிலை ஆய்வு மையமும் இஸ்ரோவும் கனமழை குறித்து முன்கூட்டியே எச்சரிக்கை கொடுத்திருந்த போதிலும் அவற்றையெல்லாம் ஜெ. அரசு அலட்சியமாகவும் திமிர்த்தனமாகவும் ஒதுக்கித்தள்ளியதன் காரணமாக, அடுத்தடுத்து பெய்த தொடர்மழையில் கடலூர் நகரமே சின்னாபின்னமாகப் புரட்டிப் போடப்பட்டிருக்கிறது. சென்னையில் பெய்த கனமழை காரணமாக ஏரிகள் நிரம்பி வெள்ளமாய் மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்து நினைத்துப் பார்க்க முடியாத சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கூடவே இந்த சேதம் அரசு எந்திரத்தின் அலட்சியத்தையும் உலகறியச் செய்திருக்கிறது. வெள்ளத்திலிருந்து அந்தந்தப் பகுதி மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொண்டதே அதிகம். அதன்பிறகு அவர்களை பாதுகாப்பான பகுதிகளில் தங்கவைப்பதை கூட பல பகுதிகளில் அரசு நிர்வாகம் செய்யவில்லை.

சென்னையில் ஜாபர் கான் பேட்டை, சூளப்பள்ளம், அசோக் நகர், வேளச்சேரி, வில்லிவாக்கம், அம்பத்தூர், தாம்பரம், முடிச்சூர் உள்ளிட்ட பல பகுதிகளும் வெள்ளத்தில் மிதக்கின்றன. தமிழகம் முழுவதிலும் இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட மக்களை வெள்ளம் காவுகொண்டுள்ளது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்க இடமின்றி பள்ளிக் கூடங்களிலும், திருமண மண்டபங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். ஏரிகள் உடைப்பெடுத்து, சாக்கடை, கழிவுகள் எல்லாம் மழைநீரோடு கலந்து குடியிருப்புகளை மூழ்கடித்து ஒருவாரகாலமாக மக்களின் அன்றாட வாழ்க்கையை, சொல்லொணாத் துயருக்குள் ஆழ்த்தியுள்ளது.

ஒரு வாரத்திற்கு மேலாகியும் வெள்ளநீர் வடியாமல் சாக்கடை நீரும் அதனோடு கலந்து தொற்றுநோய்த் தாக்கும் அபாயத்தை எதிர்கொண்டிருக்கிறது சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்கள். வீடிழந்து, உடைமையிழந்து சொந்த ஊரிலேயே அகதிகளைப்போல ஆக்கப்பட்டிருக்கின்றனர் பாதிப்பிற்குள்ளான மக்கள்.




கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, சிதம்பரம், காட்டுமன்னார்கோயில் ஆகிய வட்டங்களை சார்ந்த குமராட்சி முதல் ஆலப்பாக்கம் வரையிலான 300-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்கள் வீடுகளின்றி, குடிக்க தண்ணீர், உண்ண உணவு இன்றி தவித்து வருகின்றனர். இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சுமார் 4,000 பேர்கள் வெளி முகாம்களில் அகதிகளாக தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 31 இதழ்: 2
டிசம்பர் 2015

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# 'அம்மா': தமிழகத்தின் பேரிடர்!

இந்த மழையும் வெள்ளமும் ஜெயலலிதா அரசைப் பற்றி இதுகாறும் நாம் அறிந்திராத பரிமாணம் எதையாவது காட்டியிருக்கின்றதா? இல்லை. ஜெ.அரசு என்று அழைக்கப்படும் இந்தக் கொள்ளைக்கூட்டம், ஆபாசம், வக்கிரம், ஆணவம், பித்தலாட்டம், செயலின்மை ஆகிய அனைத்தையும் தனது பிறவிக் குணங்களாகவே கொண்டிருந்த போதிலும், இதனைக் காணத்தவறியவர் களுக்கும் காண மறுத்தவர்களுக்கும் அதன் கோர முகத்தை அம்பலப்படுத்திக் காட்டியிருக்கிறது. சினிமா நடனத்தின் ஆபாசத்தை மேலும் விகாரமாகக் காட்டும் மழைக்காட்சியைப் போன்றது இது.

நடிப்புக்காகக் கூட கருணையைக் கண்களில் வரவழைக்க இயலாத ''அம்மா'', பருவ மழையின் சீற்றம் தொடங்கிய பின்னர் வேறு வழியின்றி மலையிலிருந்து இறங்கினார். மூன்று மாத மழை ஒரே நாளில் பெய்து விட்டதாகக் கூறி, கடலூர் மக்களைக் காட்டாற்று வெள்ளத்துக்குக் காவு கொடுத்த தனது அரசின் தடித்தனத்தை நியாயப்படுத்தினார். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்காமல் அலட்சியம் செய்தார். பின்னர், எதிர்க் கட்சிகளின் விமரிசனத்துக்குப் பயந்து, கண்ணாடிக் கூண்டு வண்டிக் குள்ளிருந்தபடி விஜயம் செய்தார். டிசம்பர் துவக்கத்தில் சென்னையே மூழ்கிய பின்னரும், போயஸ் தோட்டத்தை விட்டு அசைய மறுத்தார். மோடியின் விளம்பர விஜயம் பற்றி அறிந்தவுடனே பீதியுற்று, ஹெலிகாப்டரில் பறந்தார். ''பத்து இலட்சத்து மூவாயிரத்து மூணு தயிர்சாதம், மூவாயிரத்து நாலு சாம்பார் சாதம்'' என்று அதிகாரவர்க்கம் எழுதிக் கொடுத்த புள்ளி விவரத்தை வெள்ள நிவாரணம் என்ற பெயரில் வாசித்தார் -இதுதான் ஜெயலலிதா.

எதைத் திருடுவது என்பதை மட்டுமே ஒவ்வொரு நொடியும் சிந்திக்கும் கும்பலாக ஒரு கட்சி; மக்கள் மீது அக்கறையோ, பொறுப்போ, நிர்வாகத் திறமையோ, அறிவோ, சுயமரியாதையோ இல்லாத, அடிமைத்தனத்தையும் களவாணித்தனத்தையும் மட்டுமே தமது முழுமுதல் தகுதியாகக் கொண்ட அமைச்சர்கள்; அம்மா ஆணையிடும் குற்றச்செயல்களைக் கூச்சமில்லாமல் செய்து முடிக்கும் கூலிப்படையாக சிறப்பு ஆலோசகர்கள், தலைமைச் செயலர், உயர் போலீசு அதிகாரிகள் உள்ளிட்ட விசுவாச அதிகார வர்க்கம்; இந்தக் கேவலங்கள் அனைத்தையும் சீவிச் சிங்காரிக்கவும், குற்றங்களை நியாயப் படுத்தவும், திசை திருப்பவும் தொழில் முறையில் பயிற்சி பெற்ற, பார்ப்பன, கார்ப்பரேட் ஊடகங்கள் - இதுதான் ஜெயலலிதா ஆட்சி.

இதுதான் தமிழக மக்களுக்கு எதிரான பேரிடர். இந்தப் பேரிடர் அகற்றப் படாமல் நீடிப்பதன் விளைவுதான் வெள்ளப் பேரழிவு. செம்பரம்பாக்கம் ஏரியின் நீரைச் சிறிதுச் சிறிதாக வெளியேற்ற வேண்டுமென்ற பொறியாளரின் எச்சரிக்கையைப் பொதுப்பணித்துறை செயலரும், தலைமைச் செயலரும் ஐந்து நாட்கள் கிடப்பில் போட்டனர். எந்தவித முன்னறிவிப்பும் இன்றி டிசம்பர் முதல் நாள் நள்ளிரவில் செம்பரம்பாக்கம் ஏரித் திறக்கப்பட்டுஒரு இலட்சம் கன அடிக்கு மேற்பட்ட தண்ணீர் சுனாமியைப் போல எழுந்து வந்து இலட்சக் கணக்கான வீடுகளை மூழ்கடித்து, நூற்றுக்கணக்கான மக்களைக் கொலை செய்தது. அவர்கள் சிறுகச் சிறுக கட்டியெழுப்பிய வாழ்க்கையை கண நேரத்தில் அழித்து அநாதைகளாக்கியது.

வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்டதும், உணவு - தண்ணீர் வழங்கிக் காப் பாற்றியதும், நிவாரணம் வழங்கியதும் மக்களேயன்றி, இந்த அரசு அல்ல. பேரழிவைப் பரிசாகத் தந்திருக்கும் ஒரு வளர்ச்சிப் பாதை, தோற்று நிலை குலைந்துவிட்ட ஒரு அரசமைப்பு, இவற்றால் சீரழிக்கப்பட்ட மக்கள் மீது பிணந்தின்னிகளைப் போல மொய்க்கும் அ.தி.மு.க. கும்பல் - இதுதான் வெள்ளச் சேதத்தின் வழியே விளக்கம் பெறும் அரசியல். அழிவிலிருந்து மீட்கும் முயற்சியாக மக்கள் அளிக்கும் நிவாரணப் பொருட்களின் மீது ''அசிங்கத்தை ஒட்டு'' என்று மிரட்டுகின்றனர் அ.தி.மு.க. காலிகள். அழிவைக் காட்டிலும் கொடியது இந்த அவமானம். தமிழ் மக்களின் தலையில் ஒட்டிக் கொண்டுவிட்ட அவமானத்தை, தமிழ்ச் சமூகத்தை மறித்து நிற்கும் இந்தப் பேரிடரைத் துடைத்தெறிவதற்கான வாய்ப்பை இந்த வெள்ளப் பேரழிவு வழங்கியிருக்கிறது. •

## கடலூர் மாவட்டம்:

# பட்ட காலிலே பட்ட துயரம்!

**கடந்த பத்தாண்டுகளில் அடுத்தடுத்து ஏற்பட்ட இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தைச் சீரமைக்கவும் பாதுகாக்கவும் தமிழக அரசு ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடவில்லை.**

கடந்த பத்தாண்டுகளில் நான்காவது முறையாகப் பெரும் பாதிப்பை, இழப்பைச் சந்தித்திருக்கிறது, கடலூர் மாவட்டம். 2004-இல் சுனாமி, 2005-இல் நீலம் புயல், 2011-இல் தானே புயல், இப்பொழுது காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியால் ஏற்பட்ட கனமழை-வெள்ளம். இக்காற்றழுத்த தாழ்வுப் பகுதியின் காரணமாக கடந்த நவம்பர் 7 தொடங்கி 10 முடிய கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த நெய்வேலியில் மட்டும் 48 செ.மீ. மழையும், அம்மாவட்டத்தின் சிதம்பரம், சேத்தியாதோப்பு, பண்ருட்டி, பரங்கிப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் 30 முதல் 35 செ.மீ. மழையும் பெய்திருக்கிறது. அக்டோபர் தொடங்கி டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவ மழை காலத்தில் தமிழகம் பெறும் சராசரி மழை அளவு 44 செ.மீ.தான் என்பதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், கடலூர் மாவட்டத்தில் மூன்றே நாட்களில் பெய்திருப்பது அசாதாரண மழை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

அம்மாவட்டத்தில் இம்மழையின் காரணமாக 50 பேர் மட்டுமே இறந்து போனதாக அரசு கணக்கு காட்டுகிறது. ‘‘இதுவொரு மோசடி’’ என்கிறார், சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன். இறந்தவர்களின் எண்ணிக்கை 160-ஐத் தொடக்கூடும் என்கிறார்கள் அம்மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை ஆற்றிவரும் மக்கள் அதிகாரம் அமைப்புத் தோழர்கள்.

இந்தச் சாவுகளை எதிர்பாராமல் நிகழ்ந்துவிட்ட அகால மரணங்களாக வகைப்படுத்துவது இன்னுமொரு மோசடி. அரசு கணக்கு காட்டும் அந்த ஐம்பது பேரில் சரிபாதி பேர் தாழ்த்தப்பட்டோர். மற்றொரு பாதி அன்றாடங் காய்ச்சிகள். சமூகத்தின் அடித்தட்டில் வாழும் மக்கள் எந்தளவிற்கு புறக்கணிக்கப்பட்டு, நிர்க்கதியாய் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்தக் ‘‘கொலைகள்’’ எடுத்துக் காட்டுகின்றன.

இந்த உயிரிழப்புகளுக்கு அப்பால், கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், விருத்தாசலம், காட்டு மன்னார்குடி உள்ளிட்ட 9 வட்டங்களில் 40,000 ஹெக்டேரில் (ஏறத்தாழ ஒரு இலட்சம் ஏக்கர்) பயிரிடப்பட்டிருந்த நெல், வாழை, பருத்தி, மக்காச் சோளம் பயிர்கள் முற்றிலும் அழிந்துவிட்டதாகக்

வெள்ளத்தால் பாழானது பயிர்கள் மட்டுமல்ல... (இடது)
பண்ருட்டியை அடுத்துள்ள விசூரில் வெள்ளத்தால் வீடே சேறும் சகதியுமானது.





குறிப்பிடுகிறது, இந்து நாளிதழ். (23.11.2015, பக்.5) அதேசமயம், சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் அம்மாவட்டம் முழுவதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாகுபடி பரப்பு ஏறத்தாழ மூன்று இலட்சம் ஏக்கராகும் எனக் கூறுகிறார். (புதிய தலைமுறை, நேர்படப் பேசு, 12.11.2015)

மேலும், வீராணம், பெருமாள் ஏரிகளிலிருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீராலும், கெடிலம் ஆற்றில் கரைபுரண்டோடிய வெள்ளத்தாலும் வயல்களில் மண் படிந்து, அவை உடனடியாகப் பயிர் செய்ய இலாயக் கற்றதாகிவிட்டன. காட்டுமன்னார்கோவில், சிதம்பரம் வட்டங்களிலும்; குறிஞ்சிப்பாடியை அடுத்துள்ள பூதம்பாடி, கல்குணம், கொத்தவாச்சேரி, அந்தராசிப்பேட்டை, அரங்கமங்கலம் ஆகிய கிராமங்களிலும் 3 அடி உயரத்துக்கு வீடுகளிலும், வயல்களிலும் மணல் சேர்ந்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. பயிர் இழப்பு ஒருபுறமிருக்க, மணல் குவிந்துள்ள வயல்களைச் சாகுபடிக்கு ஏற்றதாகத் திருத்தி அமைக்க ஒரு ஏக்கருக்கு ஒரு இலட்ச ரூபாய் தேவைப்படும் என வேதனையோடு குறிப்பிடுகிறார்கள், விவசாயிகள்.

இதற்கு அப்பால், வெள்ளத்தால் வயல்களிலிருந்த ஆழ்துளைக் கிணறுகள், ஆயில் இன்ஜின்கள், சூரிய சக்தி பம்புகள் அனைத்தும் சேதாரமாகிவிட்டன. 1,000-க்கும் மேற்பட்ட ஆடு, மாடுகளும், ஒரு இலட்சம் கோழிகளும் இந்த மழை-வெள்ளத்தால் இறந்து போனதாகக் கூறுகிறார், கே.பாலகிருஷ்ணன். ஏறத்தாழ 11,000-க்கும் மேற்பட்ட குடிசைகள் வெள்ளத்தால் முற்றிலும் நாசமடைந்துவிட்டதாகவும், 50 படகுகள் சூறைக்காற்றில் அடித்துச் செல்லப்பட்டு, அவற்றுள் 10 படகுகள் மட்டுமே மீட்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறது, இந்து நாளிதழ். ஒட்டு மொத்தமாகச் சொன்னால், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், மீனவர்கள், பிற உழைக்கும் மக்கள், சிறு வணிகர்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் உடைமை இழப்பின் மதிப்பு 1,000 கோடி ரூபாயைத் தொடும் எனக் கூறப்படுகிறது.

## தமிழக அரசும், என்.எல்.சியும்தான் குற்றவாளிகள்.

நியாயமான நிவாரண உதவிகளைக் கேட்கத் துணியும் மக்களை போலீசைக் கொண்டு ஒடுக்கியும், சால்ஜாப்பு வார்த்தைகளைச் சொல்லியும் துரத்திவிடும் அ.தி.மு.க. அரசு, மக்கள் சந்தித்துள்ள இழப்புகளுக்கு மழையின் மீது பழிபோட்டுத் தப்பித்துக் கொள்ள முயலுகிறது. ''மூன்று மாதங்களில் பெய்ய வேண்டிய மழை மூன்றே நாட்களில் பெய்து தீர்த்துவிட்டதால்தான் வெள்ளம் ஏற்பட்டதாக'' ஜெயா கூறிவருவது பொய்யும், புரட்டும், கயமைத்தனமும் நிறைந்தது என்பதை ஏராளமான சான்றுகள் முகத்தில் அறைந்தாற் போல எடுத்துக் கூறுகின்றன.

''பருவ மழை தொடங்குவதற்கு முன்பே கடலூர் மாவட்ட நிர்வாகம் சட்டமன்ற உறுப்பினர்களையும், மக்கள் பிரதிநிதிகளையும் அழைத்து வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கூட்டம் நடத்தியிருக்க வேண்டும். அப்படியான கூட்டத்தை நடத்துவதற்கு மாவட்ட நிர்வாகம் முயலவேயில்லை என்பதோடு, அதிகாரிகளுக்கு மாவட்டத்தின் எந்தெந்த பகுதிகளில் வெள்ளப் பாதிப்புகள் ஏற்படும் என்பதுகூடத் தெரியவில்லை'' என வெளிப்படையாகவே குற்றஞ்சுமத்தியிருக்கிறார், சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன்.

''இரண்டாம் நாளும் நிற்காமல் மழை பெய்யும் போதே கெடிலம் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்படும்; பரவனாறில் நெய்வேலி சுரங்க உபரி நீர் வெளியேறும் என்பதைக் கணித்திருக்க முடியும்.

கடலூர் மாவட்டம் கல்குணம் கிராமத்தில் என்.எல்.சி. வெளியேற்றிய நீரால் மண்ணோடு மண்ணாகிப் போன குடிசை (இடது); காட்டுமன்னார் கோவில் வட்டம் வீரநத்தம் கிராமத்தில் வெள்ளத்தில் மூழ்கியிருக்கும் குடிசை.







வெள்ளநீர் சூழ்ந்துள்ள சிதம்பரத்திற்கு அருகிலுள்ள வைரங்குப்பம் கிராம மக்கள் ஒரு குடம் குடிநீருக்காகப் படும் துயரம்.

குறைந்தபட்சம் அக்கரையோரங்களில் வசிக்கும் மக்களைப் பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு சென்றிருக்க முடியும்'' என்கிறார்கள் பொதுமக்கள்.

மழை வருவதற்கு எட்டு நாட்கள் முன்னதாகவே வீராணம் ஏரிப் பாசன சங்கத்தின் செயலர் வீராணம் ஏரியில் 44 அடிக்கு மேலாக உள்ள தண்ணீரை வெளியேற்றுமாறு கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் கொடுக்கிறார். அக்கடிதம் கண்டுகொள்ளப்படவில்லை. இக்கடிதத்திற்கு முன்னதாகவே, வீராணம் ஏரி நீரைப் பாசனத்திற்குத் திறந்துவிடுமாறு கோரிப் போராடிய விவசாயிகள் மீது தடியடி நடத்தப்பட்டது. இப்படி நாயிடம் சிக்கிய தேங்காயைப் போல வீராணம் ஏரித் தண்ணீரைப் பிடித்து வைத்திருந்த அரசு, மழை கொட்டியவுடன் 18,000 கன அடி நீரை அந்த ஏரியிலிருந்து வெளியேற்றியது. ஜெயா அரசின் முட்டாள்தனமும் அகங்காரமும் கொண்ட இந்தக் குற்றச் செயல்தான் திருநாரையூர், வீரநத்தம், சர்வராஜன் பேட்டை, கீழவன்னியூர் உள்ளிட்ட 50 கிராமங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தது. இன்னொருபுறம் வெள்ளாற்றில் இருந்து வெளியேற்றப்பட்ட நீர் அள்ளூர், பூதங்குடி, ஒரத்தூர், பரதூர் உள்ளிட்ட 50 கிராமங்களை மூழ்கடித்தது. ''50,000 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த நெல்லும், வாழையும், வெற்றிலையும் முற்றிலுமாக அழிந்துவிட்டன. இப்பேரழிவுக்கு பொதுப்பணித் துறை அதி



சி.பி.எம். கட்சியின் சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன்

## கடலூர் நகரம் வெள்ளக்காடானது ஏன்?

நெய்வேலி, பண்ருட்டி, சிதம்பரம் ஆகிய பகுதிகளோடு ஒப்பிடும்பொழுது கடலூரின் பெய்த மழையின் அளவு குறைவுதான் (11 செ.மீ.). ஆனாலும், கடலூர் நகரம் வெள்ளக்காடானதற்கு அந்நகரின் கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள உப்பனாற்று முகத்துவாரமும், கெடிலம் ஆற்று முகத்துவாரமும் கடந்த ஆறாண்டுகளாக தூர் வாரப்படாததுதான் காரணம். இந்த இரண்டு முகத்துவாரங்கள்தான் 108 கடலோர கிராமங்களுக்கு வெள்ளப் போக்கியாக விளங்குகின்றன. இந்த இரண்டு முகத்துவாரங்களும் அரசால் தூர்வாரப்படாமல் அலட்சியப்படுத்தப்பட்டதால், இவற்றின் வழியாகக் கடலுக்குள் செல்ல வேண்டிய வெள்ள நீர், கடலுக்குள் நுழைய வழியில்லாமல் சென்ற வேகத்தில் மீண்டும் கடலூருக்குள்ளும், கடலோர கிராமங்களுக்குள்ளும் புகுந்துவிட்டது. மேலும், கடலூர் நகரில் இருந்த 21 குளங்களில் தற்பொழுது எஞ்சியிருப்பது 3 குளங்கள் மட்டும்தான். மற்ற குளங்களும் அந்நகரில் 21 கி.மீ. தூரத்திற்கு அமைந்திருந்த வடிகால்களும் ஆக்கிரமிக்கப்பட்டு வீட்டு மனைகளாக்கப்பட்டுவிட்டன. இவையெல்லாம் சேர்ந்துதான் கடலூர் நகரை வெள்ளத்திற்குள் மூழ்கடித்துவிட்டது.

இவை ஒருபுறமிருக்க, கடலூர் தொடங்கி நாகை வரை கடலோரமாக 57 இடங்களில் 15 மீட்டர் உயரத்தில் மணற்குன்றுகள் இயற்கையாகவே அமைந்திருந்தன. இந்த மணற்குன்றுகள் கடலூர் பகுதியைப் புயலில் இருந்த தடுக்கும் இயற்கை அரணாக விளங்கின. கடலூர் நகரில் சிப்காட் வளாகத்தை அமைப்பதற்காக இந்த மணற்குன்றுகளில் பெரும்பகுதி அழிக்கப்பட்டுவிட்டன. 'தொழில் வளர்ச்சி' க்காக அரசே முன்நின்று செய்த இந்த அழிவு, கடலூரை அடிக்கடி புயல் தாக்கும் களமாக மாற்றிவிட்டது.

## சுரங்கங்கள் தப்பித்தன, கிராமங்கள் மாண்டன!

அந்த மூன்று நாட்களில் நெய்வேலியில் மட்டும் 48 செ.மீ. மழை கொட்டித்தீர்த்தது. இதனால் நிலக்கரி சுரங்கங்களில் தேங்கிய தண்ணீரை பரவனாற்றில் திறந்துவிட்டது, என்.எல்.சி. நிர்வாகம். இதனால் பூதம்பாடி, அந்திராசம் பேட்டை, ஓணாண்குப்பம், காடாம்புலியூர், மேல்பாதி, கீழ்பாதி உள்ளிட்ட பல கிராமங்களில் வீடுகளிலும் வயல்களிலும் வெள்ளம் புகுந்து தனித்தனி தீவுகளாக மாறின. மின்சாரம் இன்றி, குடிநீர் இன்றி, தங்க இடமின்றி, வெளியேற வழியின்றி அக்கிராம மக்கள் அடைந்த துன்பமும், சந்தித்த அபாயமும் சொல்லி மாளமுடியாது. நீரை வெளியேற்றுவதற்கு முன்பு எச்சரிக்கை விடுத்து, பரவனாறு செல்லும் வழியாக உள்ள கிராம மக்களை அப்புறப்படுத்தி வேறு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க என்.எல்.சி. நிர்வாகமும் அக்கறை கொள்ளவில்லை; தமிழக அரசும் கண்டுகொள்ளவில்லை.

''நெய்வேலி சுரங்கத் தண்ணீர் நிலக்கரி கசடுடன் சென்று பரவனாறு மேடாகிவிட்டது. இதனைச் சுத்தம் செய்யச் சொன்னது யார் காதிலும் விழவில்லை'' என்கிறார்கள் பாதிக்கப்பட்ட கிராம மக்கள். என்.எல்.சி. வெளியேற்றிய நீரால், போரினால் நிர்மூலமாக்கப்பட்ட ஊர் போல பூதம்பாடி கிராமம் காணப்படுவதாகக் குறிப்பிடுகிறது, இந்து நாளிதழ். ''என்.எல்.சி. நிர்வாகமோ அல்லது அரசாங்கமோ பரவனாற்றில் வடிகால் பாலங்கள் கட்டிக் கொடுத்திருந்தால், இந்தப் பிரச்சினை வந்திருக்காது. இனி மேலாவது அதைச் செய்யணும்'' எனக் குமுறுகிறார்கள், அக்கிராம மக்கள்.

பொதுமக்களுக்குத் தெரிந்துள்ள இந்த எளிய தீர்வுகள் மெத்தபடித்த அதிகாரிகளுக்குத் தெரியாமல் போனது தற்செயலானதா?

காரிகள்தான் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்'' எனக் குமுறுகிறார், கீழவன்னியூரைச் சேர்ந்த விவசாயி ரவி.

வீராணம், பெருமாள் ஏரிகளிலிருந்தும், வெள்ளாற்றிலிருந்தும் உபரி நீரைத் திறந்துவிட்டதாக அதிகார வர்க்கம் கூறிவருவது மற்றுமொரு மோசடி. வீராணம் ஏரியின் மொத்த கொள்ளளவு 47.50 அடி. ஏரியில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தடுப்பதற்காக, பருவ மழை தொடங்கு முன்பு ஏரியில் 44 அடி வரை மட்டுமே நீரைத் தேக்கி வைக்க வேண்டும் என அரசு உத்தரவு உள்ளது. ஆனால், இந்த உத்தரவை அரசே மதிப்பதில்லை.

சென்னையின் குடிநீர் தேவைக்காக ஏரியில் 46 அடி வரை நீரைத் தேக்குவதை வாடிக் கையாக வைத்திருக்கிறது, அதிகார வர்க்கம். பருவ மழை தொடங்குவதற்கு முன்பாகவே வீராணத்தில் 44 அடிக்குக் கூடுதலாகத் தேக்கி வைக்கப்பட்டிருந்த நீரை வேண்டுமென்றே வெளியேற்றாமல் அதிகாரிகள் அலட்சியப் படுத்தியது, கடலூர் மாவட்ட மக்களைக் கடுமையான வெள்ளத்திற்குள் சிக்க வைத்தது.

இந்த அலட்சியம் ஒருபுறமிருக்க, வீராணம் ஏரி கடந்த நான்காண்டுகளில் ஒருமுறைகூடத் தூர்வாரப்படவில்லை. 2013-ஆம் ஆண்டு தமிழக சட்ட மன்றத்தில் நடந்த மானியக் கோரிக்கையின்பொழுது, வீராணம் ஏரியைத் தூர்வார 40 கோடி ரூபாயை ஒதுக்குவதாக 110 விதியின் கீழ் அறிவித்தார், ஜெயா. அந்த அறிவிப்பு அவரின் மற்ற அறிவிப்புகளைப் போலவே காற்றோடு போய்விட்டது. வீராணம் ஏரி முறையாகத் தூர் வாரப்பட்டிருந்தால் அந்த ஏரியில் 1,465 மில்லியன் கன அடி நீரைத் தேக்கியிருக்க முடியும். ஆனால், தூர்வாரததால் அந்த ஏரியின் கொள்ளளவு 906 கன அடியாகச் சரிந்துவிட்டது. இதனால் அந்த ஏரியில் சேமித்திருக்க வேண்டிய 500 மில்லியன் கன அடிக்கும் ( 1/2 டி.எம்.சி.) மேலான தண்ணீர் வெள்ளமாக வெளியேற்றப்பட்டது.

பெரிய காட்டுப்பாளையத்தில் பத்து உயிர்கள் வெள்ளத்திற்குப் பலியான பிறகு, அங்குள்ள ஓடையை அவசர அவசரமாகத் தூர் வாருகிறது அரசு: பாவத்திற்குப் பரிகாரமா?





கடலூர் - நாகை கடற்பகுதியில் இயற்கை அரணாக அமைந்திருந்த மணற்குன்றுகளை அழித்து உருவாக்கப்பட்ட சிப்காட் தொழில் வளாகத்தின் ஒரு பகுதி.

## அழிக்கப்பட்ட அரண்களும் காகித வாக்குறுதிகளும்

**க**டலூர் மாவட்டம் என்பது புவியியல்ரீதியாக இயற்கையாகவே அமைந்த வடிகால் பகுதியாகும். இதற்கேற்ப இயற்கையாகவே இம்மாவட்டத்தில் கெடிலம், வெள்ளாறு, தென்பெண்ணை, பரவனாறு, உப்பனாறு, கொள்ளிடம் ஆகியவை வடிநீர் ஆறுகளாக அமைந்துள்ளன. மேலும், இந்த இயற்கை அமைப்பைப் புரிந்துகொண்டுதான் நமது முன்னோர்கள் மழை நீரைச் சேமிக்கவும், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும் அம்மாவட்டப் பகுதியில் வீராணம், பெருமாள் ஏரி, வாலாஜா ஏரி உள்ளிட்டு மூவாயிரத்துக்கும் அதிகமான ஏரி, குளங்களை அமைத்திருந்தனர். அவை ஆக்கிரமிப்புகளால் இன்று 267 ஏரி, குளங்களாகச் சுருங்கிப் போனதும்; எஞ்சியிருக்கும் அந்த ஏரி, குளங்களையும், அம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அணைக்கட்டுகளையும் தூர் வாராமலும், பராமரிக்காமலும் புதர்களும், சேறும் மண்டவிட்டிருப்பதும்தான் இந்தப் பேரழிவுக்கான முதன்மைக் காரணமேயொழிய, அதிகமாகப் பெய்துவிட்ட மழை காரணமல்ல.

கடலூர் மாவட்டத்தில் வீராணத்துக்கு அடுத்த பெரிய ஏரி பெருமாள் ஏரி. அந்த ஏரியை ஒட்டி அமைந்துள்ள மேல்பூவானிக்குப்பம் கிராமத்தில் பெருமாள் ஏரியின் உபரி நீர் வெளியேறுவதற்காக 20 வடிகால்கள் இருந்தன. அவை அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டதால் மேல்பூவானிக்குப்பம் பகுதி வெள்ளக் காடானது. அம்மாவட்டத்தில் அமைந்துள்ள மற்றொரு பெரிய ஏரியான வாலாஜா ஏரியின் ஒரு பகுதி புதர் மண்டிக்கிடக்கிறது. பொதுமக்களின் முன் முயற்சியாலும், கடலூர் மாவட்ட ஆட்சியராக இருந்த ககன்தீப் சிங் பேடியின் உதவியாலும் மீட்டெடுக்கப்பட்ட அந்த ஏரியின் இன்னொரு பகுதியில் மட்டும்

## இது கொலைக் குற்றமாகாதா?

**ப**ண்ருட்டி அருகே பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தில் கடந்த 9-ஆம் தேதி ஏற்பட்ட திடீர் வெள்ளப் பெருக்கில் சிக்கி வீரமணி என்பவரது குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் உட்பட 10 பேர் மாண்டு போனார்கள். பெரியகாட்டுப்பாளையம் கிராமத்தை ஒட்டி இருக்கும் இந்தப் பகுதி ஒரு நீர்வழிப் புறம்போக்காகும். கல்வராயன் மலையில் தொடங்கி விழுப்புரம் வரை பெய்யும் ஒட்டு மொத்த மழைநீரும் பெரிய ஓடை, சின்ன ஓடை வழியாகச் சென்று கெடிலம் ஆற்றில் சேருகிறது. இந்த ஓடை புறம்போக்கில் 10 குடும்பத்தினர்தான் வசித்து வருகிறார்கள். அனைவரும் ஏழைகள், நிலையான வாழ்வாதாரம் இல்லாதவர்கள்.

காட்டாற்றின் ஓட்டத்தைத் திசை திருப்பி ஆக்கிரமிக்கப்பட்ட மேட்டிலும், கரையிலும் காலனி வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறது அரசாங்கம். ஆற்றுப் பாதையும் காலனி வீடுகள் அமைந்திருந்த தெருவும் கிட்டதட்ட ஒரே மட்டத்தில் அமைந்துள்ளன. வீட்டையே மூழ்கடிக்கும் அளவிற்கு வந்த வெள்ளம் 10 பேரை விழுங்கிச் சென்று விட்டது.

நீர் வழி ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்த இடத்தில் தங்கி இருந்தவர்களுக்கு மாற்று இடம் வழங்கி இருந்தால், இந்த உயிர்ச்சேதம் ஏற்பட்டிருக்காது எனக் குறிப்பிடுகிறது, ஜூ.வி.இதழ். (22.11.15, பக்.39) இத்துணை ஆண்டுகளாக அதனைச் செய்ய மறுத்துவந்த தமிழக அரசு, இப்பொழுது தனது பாவத்தைக் கழுவ வெள்ளத்தில் தப்பிப் பிழைத்த வீரமணிக்கு நட்ட ஈடு கொடுத்துவிட்டு, ஆற்றுப் பாதையைத் தூர்வாரிக் கொண்டிருக்கிறது.

தான் தற்பொழுது மழைநீர் நிரம்பியிருக்கிறது. புதர் மண்டிக் கிடக்கும் பகுதியில் சேர வேண்டிய நீர் வெள்ளமாக வெளியேறிவிட்டது.

2011 டிசம்பரில் தானே புயல் தாக்கிய பிறகு கடலூர் மாவட்டத்தை வெள்ள அபாயத்திலிருந்து மீட்கப் போவதாகக் கூறி, ‘‘புதிய நீர்நிலைகள் உருவாக்கப்படும்; மின்சார இணைப்புகள் தரைவழியில் உருவாக்கப்படும்; 300 கோடி ரூபாய் செலவில் வீராணம் ஏரியில் இருக்கும் உபரி நீரை கொள்ளிடம் ஆற்றில் சேர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும்; 120 கோடி ரூபாய் செலவில் வீராணம் ஏரி வெள்ள நீர் சேகரிப்புத் திட்டம் உருவாக்கப்படும்’’ என்றெல்லாம் பல்வேறு திட்டங்களை டாம்பீகமாக அறிவித்தார், ஜெயா. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் அவற்றுள் ஒன்றுகூட நிறைவேறவில்லை.

கடலூரை சுனாமி தாக்கியபொழுது, கெடிலம் ஆற்றின் கரையிலிருந்து 6 கி.மீ. தூரத்திற்குத் தண்ணீர் உள்ளே புகுந்தது. எனவே, முகத்துவாரத்திலிருந்து அந்தத் தொலைவுக்கு கான்கிரீட் சுவர் கட்ட வேண்டும் எனப் பொதுமக்கள் வைத்த கோரிக்கையைத் தமிழக அரசு கண்டுகொள்ளவில்லை என்கிறார், கடலூர் அனைத்துக் குடியிருப்பு சங்கச் செயலர் மருதவாணன்.

இப்படி வெள்ள அபாயத்திலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போடாத அரசு, விரைவுச் சாலைகள் அமைப்பதற்காக ஆறு அடி உயரத்துக்கு இருந்த கெடிலம், பெண்ணையாற்றுக் கரைகள் சாலை மட்டத்துக்கு ஏற்ப குறைக்கப்பட்டதால் வெள்ள அபாயத்துக்கு வழிவகுத்தது என்கிறார், அரசு ஊழியர் சங்கத்தின் முன்னாள் தலைவர் கு.பாலசுப்பிரமணியன்.

‘‘வீராணம் ஏரியைத் தூர்வாரியிருந்தால் மேலும் ஒரு டி.எம்.சி. தண்ணீரைச் சேமித்திருக்க முடியும்; கடலூர் மாவட்ட வடிநீர் ஆறான கொள்ளிடத்தில் ஏழு தடுப்பணைகள் கட்டியிருந்தால் ஏழு டி.எம்.சி. தண்ணீரைச் சேமித்திருக்க முடியும்’’ என்கிறார், சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன்.

‘‘கெடிலம், வெள்ளாறு, தென்பெண்ணை ஆறுகளில் தடுப்பணைகளை உருவாக்கியிருந்தால், பெரிய வடிகால் ஆறான கொள்ளிடத்தில் கதவணைகளைக் கட்டியிருந்தால் பல டி.எம்.சி. தண்ணீரையும் சேமித்திருக்க முடியும். வெள்ள அபாயத்தையும், மக்களின் இழப்புகளையும் மட்டுப்படுத்தியிருக்க முடியும்’’ என்கிறார் காவிரி டெல்டா பாசன விவசாயிகள்-விளைபொருள் உற்பத்தியாளர்கள் சங்கத் துணைத் தலைவர் கே.வி.கண்ணன்.

தமிழக அரசு இந்த நீர் மேலாண்மையில் அக்கறை செலுத்தாததால், கடலூர் மாவட்டத்தில் சேமித்திருக்கக்கூடிய 51 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகம் இழந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. வெள்ளத்தில் மக்களைச் சிக்கவைத்து, அவர்களின் உயிரையும் உடைமைகளையும் பறித்த குற்றத்துக்கு இணையானது இது.

● ரஹீம்

## இதுவா மக்கள் நல அரசு?

நீர்நிலைகளைப் பாதுகாக்கவில்லை, ஏரி, முகத்துவாரங்களைத் தூர்வாரவில்லை என்பதை மட்டுமல்ல; வெள்ளப் பெருக்கில் சிக்கிக் கொண்ட மக்களுக்கு உதவக்கூடிய சில எளிய, அத்தியவாசியமான தேவைகளைக் கூட அரசும் அதிகார வர்க்கமும் செய்ய மறந்துவிட்டன, மறுத்துவிட்டன எனப் பொதுமக்கள் குற்றஞ்சுமத்தியிருக்கிறார்கள்.

‘‘இவ்வளவு பெரிய புயல் வரும்பொழுது மின்சாரம் துண்டிக்கப் படும்னு எல்லோருக்கும் தெரியும். அதற்கு மாற்றாக மொபைல் ஜெனரேட்டர்களை ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஜெனரேட்டர்களை ஏற்பாடு செய்ய முடியாவிட்டால், மெழுகுவர்த்திகளையாவது வாங்கி ஸ்டாக் வைத்திருக்க வேண்டும். அதனைச் செய்யாததால் 5 ரூபாய் மெழுகுவர்த்தி 75 ரூபாய்க்கு விற்றது. முன்கூட்டியே டாங்கர்களில் குடிநீரைச் சேமித்து விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இது போன்று பால் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை முன்கூட்டியே கலெக்ட் செய்து விநியோகித்திருக்க வேண்டும். பேரிடர் காலங்களில் மக்களைக் கொண்டுபோய் தங்க வைக்க தனி மையங்கள் அமைத்திருக்க வேண்டும். அவை இல்லாததால், மக்கள் பள்ளிக்கூடங்களில்தான் தங்க வைக்கப்பட்டார்கள் ’’ என அதிகார வர்க்கத்தின் மெத்தனத்தைச் சுட்டிக் காட்டும் பொதுமக்கள், இவை அனைத்தும் எங்களுக்கு ‘‘தானே’’ புயல் கற்றுக்கொடுத்த பாடம் எனக் குறிப்பிட்டுச் சொல்லவும் தவறவில்லை.

ஆறுதல் நாடகத்தை நடத்த பெரிய காட்டுப்பாளையத்திற்கு வந்த அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் சிறப்பு அதிகாரி ககன்தீப் சிங் பேடியை முற்றுகையிடும் கிராம மக்கள்.



## சென்னை:

# இயற்கையை அழித்த குற்றத்தின் தண்டனை

**செயற்கையாகவும் அராஜகமாகவும் உருவாக்கப்படும் நகர வளர்ச்சி எத்தகைய பேரழிவை ஏற்படுத்தும் என்பதை சென்னை உணர்த்தியிருக்கிறது.**

''உங்க ஃபிளாட் ஏரிக்குப் பக்கத்துலேயே இருக்கு. தண்ணிப் பிரச்சினையே இருக்காது என பில்டர் சொன்னதை நம்பி, பெரும் ஆசையுடன் லேக் வியூ ஏரியாவில் வீடு வாங்கினேன். அதன் ஆபத்தை இப்போது அனுபவிக்கிறேன்.''

- சென்னையின் புறநகர்ப் பகுதியான பெரும் பாக்கம் லேக் வியூ ஏரியா வாசியான அரவிந்தின் புலம்பல் இது. வழக்கமாக மழைக் காலங்களில் சென்னையின் கூவம், அடையாறு கரையோரங்களில் கேட்கப்படும் கதறலை இந்த மழைக் காலத்தில் மேட்டுக்குடியினர் வசிக்கும் பெரும்பாக்கத்திலும், வேளச்சேரியிலும், மேற்கு தாம்பரத்திலும், பழைய மகாபலிபுரம் சாலையிலும் கேட்க முடிந்தது.

50,60 இலட்ச ரூபாய் கொடுத்து வாங்கப்பட்ட அரவிந்தின் வீடு ஏறக்குறைய வெள்ளத்தில் மூழ்கி விட்டது. அரவிந்தும், அவரது பிளாட்டில் வசிக்கும் மற்றவர்களும் ஒரு படகை வாடகைக்குப் பிடித்து வெளியேறித் தப்பித்துள்ளனர்.

அடைமழைக் காலங்களில் சென்னையில் கோட்டூர்புரம், வேளச்சேரி உள்ளிட்ட 150 இடங்களில் தண்ணீர் தேங்குவது வாடிக்கையானது. ஆனால், இந்த மழையின்போது சென்னை மாநகரின் 15 மண்டலங்களும், அதன் புறநகர்ப் பகுதிகளான சோழிங்க நல்லூர், பனையூர்குப்பம், மடிப்பாக்கம், பள்ளிக்கரணை, நந்தம்பாக்கம், துரைப் பாக்கம், அம்பத்தூர், ஆவடி, செம்மஞ் சேரி உள்ளிட்ட பலவும் வெள்ளத்தால் சூழப்பட்டு தனித்தனி தீவுகளாகின.

மேற்கு தாம்பரம், பெரும்பாக்கம், வேளச்சேரி, முடிச்சூர், வரதராஜபுரம், சங்கர் நகர் உள்ளிட்ட பகுதி களில் ஆறடி உயரத்திற்கு ஏரி நீர் புகுந்தது. இந்தப் பகுதி களில் அடுக்குமாடி குடியிருப்புகளின் முதல் தளத் திலும், ''வில்லா'' போன்ற தனி பங்களா வீடுகளிலும் வசித்தவர்கள் முதல்மாடிக்குச் சென்று உயிர் பிழைத் திருக்கிறார்கள்.

இந்த மழையால் வட சென்னையில் மட்டும் ஏறத்தாழ 30 இலட்சம் பேர் ஏறத்தாழ அகதி நிலைக்குத் தள்ளப்பட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன. சென்னை - வில்லிவாக்கத்திலுள்ள சிட்கோ நகர் வெள்ளத்தில் மூழ்கியதால், அங்குள்ள சிறு உற்பத்தி யாளர்களுக்கு ஏறத்தாழ 300 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. அம்பத்தூர் தொழிற்பேட்டையும் இந்த வெள்ளத்திற்குத் தப்ப

படகு விட்டு காப்பாற்ற வேண்டிய அளவிற்கு மூழ்கிப்போன மேற்கு தாம்பரம் சி.டி.ஓ. காலனி (இடது). செம்பரம்பாக்கம் ஏரியை முன்னெச்சரிக்கையின்றித் திறந்து விட்டதால், சைதாப்பேட்டை அடையாற்றின் ஓரத்தில் அழிந்துபோன ஒண்டுக் குடியிருப்புகள்.





வில்லை. இந்தப் பொருள் இழப்புகளுக்கு அப்பால், நாற்பது பேர் நவம்பர் இரண்டாவது வாரத்தில் பெய்த மழைக்குப் பலியாகியுள்ளனர்.

இது போன்ற மழைப் பொழிவு சென்னைக்குப் புதிது அல்ல. இந்தாண்டு நவம்பர் 9,10,11 தினங்களில் பெய்த மழையை (235 மி.மீ) விட அதிகமான மழை, 2005-அக்டோபர் 27-ஆம் தேதி ஒரே நாளில் 270 மி.மீ. பெய்திருக்கிறது. அதைவிட அதிகமாக 1969-இல் 280 மி.மீ. மழையும் 1976 நவம்பரில் 450 மி.மீ. மழையும் பெய்திருக்கிறது. எனவே, மூன்றே நாளில் கொட்டித் தீர்த்த மழையினால் சென்னை வெள்ளக்காடானது என ஜெயாவும் அவரது அடிவருடிகளும் கூறுவதற்குப் பின்னே, அ.தி.மு.க. ஆட்சியின் அலட்சியத்தை, அதன் குற்றங்களை மறைத்துக் கொள்ளும் தந்திரம் தான் மறைந்திருக்கிறது.

''சென்னை நகரில் போடப்பட்டுள்ள 1,860 கி.மீ. தூரமுள்ள மழைநீர் வடிகால் கால்வாய்களிலிருந்து 6,000 டன் கொண்ட சேறு மற்றும் கழிவுகள் அப்புறப்படுத்தப்பட்டுவிட்டதால், இந்த முறை பருவ மழையை எளிதாகச் சமாளித்துவிடுவோம்'' என அறிவித்தது, சென்னை மாநகராட்சி (தினகரன், 17.11.2015). அது வடிகட்டிய பொய் என்பதை இந்த மழை அம்பலப்படுத்திவிட்டது.

அ.தி.மு.க. அரசின் இத்தகைய அலட்சியம் ஒருபுறமிருக்க, 174 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் இருந்த சென்னை கடந்த இருபது, இருபத்தைந்து ஆண்டுகளில் 471 சதுர கிலோமீட்டராக வீங்கிப் போனதன் எதிர்விளைவாகத்தான் வெள்ளக் காடானது என்பதை இப்பொழுது மறுப்பவர்கள் யாரும் இல்லை.

''கடந்த 25 ஆண்டுகளில் மட்டும் போதிய அறிவியல் மற்றும் பொறியியல் ஆய்வுகள் இன்றி, திட்டமிடப்படாமல் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளும், கல்லூரிகளும், அரசுக் கட்டிடங்களும், விரைவுச் சாலைகளும் பற்றி ஒரு கணக்கெடுப்பு நடத்தினால், அதில் கிடைக்கும் புள்ளிவிவரங்களே இராணுவம் வந்து மீட்கும் அளவுக்கு சென்னை மிதந்தது ஏன் என்ற கேள்விக்கு விடையளிக்கும்'' என துறைசார்ந்த நிபுணர் ஒருவர் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் குறிப்பிட்டார்.

## ஏரிகள் அழிந்தன, சென்னை மிதந்தது

கூடுவாஞ்சேரி, சிங்கபெருமாள் கோவில், ஊரப்பாக்கம் உள்ளிட்ட சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் உள்ள ஏரிகளிலிருந்து வெளியேற்றப்படும் உபரி நீரும்; செம்பரம்பாக்கம், போரூர் ஏரி, மாம்பலம், நந்தனம் வடிகால் பகுதி நீரும்; மணப்பாக்கம், ஜாபர்கான் பேட்டை, ராமாபுரம், சைதாப்பேட்டை, கோட்டூர்புரம் உபரி நீரும்; வடசென்னை ஏரிப்பகுதிகளிலிருந்து வரும் உபரி நீரும் இணைந்து கால்வாய்கள் மூலம் அடையாறு ஆற்றை வந்தடைந்து கடலில் கலக்கும் விதமாக முந்தைய காலங்களில் நீர்வழித் தடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தாம்பரம், வேளச்சேரி, அம்பத்தூர், கொரட்டூர், மாதவரம் பகுதிகளிலிருந்து கால்வாய் வழித்தடங்கள் மூலம் வெள்ள நீர் தேங்காமல் ஆற்றை வந்தடையும் வகையில் இருந்தன (தின, 25.11., பக்.6). இந்தக் கட்டுமானத்தை அறுத்தெறிந்து, குற்றுயிரும் குலைஉயிருமாக்கிவிட்டது, சென்னையின் 'வளர்ச்சி'.

அரசு, ரியல் எஸ்டேட்-கட்டுமான நிறுவனங்கள், தகவல்-தொழில்நுட்ப நிறுவனங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் செயல்படும் உற்பத்தி சார் கார்ப்பரேட் நிறுவனங்கள், கல்வி வியாபாரிகள், மத்திய மற்றும் உயர் வருவாய் பிரிவைச் சேர்ந்த புதுப் பணக்கார கும்பல் - இவர்கள்தான் சென்னையின் இரத்த நாளங்களாக இருந்த நீர்வழித் தடங்களை அழித்த குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

''1906-ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி ஒருங்கிணைந்த சென்னையில் 474 நீர்ப்பிடிப்பு நிலைகள் (ஏரி, குளம், குட்டை, தாங்கல் உட்பட) இருந்தன.

வெள்ளத்தால் வீதிக்கு வந்த மக்களைத் தங்க வைக்க போதிய மையங்கள் ஏற்பாடு செய்யப்படாததால், அவர்கள் தெருவிலும் (பழைய பெருங்களத்தூர்) ஆட்டோக்களிலும் (அமைந்தகரை) தஞ்சமடைய நேரிட்ட அவலம்.





2013-இல் எடுத்த கணக்கீட்டில் இந்த எண்ணிக்கை 43 நீர்ப்பிடிப்பு நிலைகளாகச் சுருங்கி, 90 சதவீத நீர்ப்பிடிப்பு நிலைகள் களவாடப்பட்டுவிட்டதாக''க் குறிப்பிடுகிறது ஓர் ஆய்வறிக்கை.



கழிவுநீர் கலந்துவரும் குடிநீரைக் குடிக்க வேண்டிய நிலையில் நிறுத்தப்பட்டுள்ள செம்மஞ்சேரி சுனாமி குடியிருப்பு பகுதி மக்கள்.

பழைய சென்னையின் அடையாளங்களான மேற்கு மாம்பலம், பாண்டி பஜார், பனகல் பூங்கா, கோடம்பாக்கத்தின் ஒரு பகுதி, சூளைமேடு, லயோலா கல்லூரி, வள்ளுவர் கோட்டம் உள்ளிட்டவை ''லாங் டேங்க்'' என்றழைக்கப்பட்ட சென்னையின் பிரம்மாண்டமான ஏரியின் அழிவில்தான் உருவாகியிருக்கின்றன. இந்த ஏரி சேத்துப்பட்டு, நுங்கம்பாக்கம், தேனாம்பேட்டை, சைதாப்பேட்டை வரை குதிரை லாட வடிவில் நீண்டிருந்ததோடு, அந்தந்த பகுதிக்கு ஏற்ப நுங்கம்பாக்கம் ஏரி, மாம்பலம் ஏரி, மயிலாப்பூர் ஏரி என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டதற்கு 1909-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசிதழில் ஆதாரங்கள் உள்ளன.

1970-80 காலக்கட்டத்தில் உருவான முகப்பேர், விருகம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளும், 1990-களில் தனியார்மயம் புகுத்தப்பட்டபின் உருவான வேளச்சேரி, பெரும்பாக்கம், மடிப்பாக்கம், மேற்கு தாம்பரம் உள்ளிட்ட பகுதிகளும் பல்வேறு நீர் ஆதாரங்களை அழித்தும், ஆக்கிரமித்தும்தான் எழுந்து நிற்கின்றன.

அம்பத்தூர் ஏரியை ஆக்கிரமித்து 6,000 வீடுகளை அரசே கட்டிக் கொடுத்துவிட்டு, அதற்கு ''ஏரி ஸ்கீம்'' என்ற நாமகரணத்தையும் சூட்டியிருக்கிறது.

சென்னையின் புறநகர்ப் பகுதியான வரதராஜபுரத்தில் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டு வெளியேற முடியாமல் தவித்துக் கொண்டிருந்த பொதுமக்களை மீட்டு வர, கையில் மேப்புடன் வந்த பேரிடர் மேலாண்மைக் குழுவினர் வெள்ளத்தில் நீந்தி அந்தப் பகுதியை ஆராய்ந்த பின்னர் இப்படிச் சொன்னார்கள்: ''மேப்ல இருக்கிற மாதிரி ஆறோ, ஏரியோ தெரியல. எல்லாம் என்க்ரோச்மெண்ட் (ஆக்கிரமிப்பு), சந்து, வீடு, கால்வாய், டிரான்ஸ்பார்மர், டிரைனேஜ் இப்படித்தான் இருக்குது.'' இதுதான் சென்னையின் இன்றைய நிலைமை. அரசிடம் உள்ள மேப்பில் ஏரியாக இருப்பது, ஆக்கிரமிக்கப்பட்டு அடுக்குமாடி குடியிருப்பாக, வில்லாக்களாக, மால்களாக, ஐ.டி. பார்க்குகளாக, புறவழிச்சாலைகளாக, மேம்பாலங்களாக உருமாறி நிற்கின்றன.

நிலத்தடி நீரைச் சேமித்து வைப்பதில் சதுப்பு நிலங்களின் பங்கு முக்கியமானது. அவை தங்களது பரப்பளவைப் போல சுற்றுப்பகுதியில் பத்து மடங்கு பரப்பளவுக்கு நிலத்தடி நீரை வற்றாமல் பாதுகாக்கின்றன.

## ஏரிகளை ஆக்கிரமித்திருக்கும் கல்விக் கொள்ளையர்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள்

- எம்.ஜி.ஆர். ஆட்சியில்தான் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு நிலங்களை சாராய உடையார் போன்ற கிரிமினல் கும்பல்கள் துணிந்து ஆக்கிரமித்துக் கொள்வதற்கு கால்கோள் நாட்டப்பட்டது. குறிப்பாக, சென்னையின் குடிநீர் ஆதாரங்களுள் ஒன்றான 800 ஏக்கர் பரப்பு கொண்டிருந்த போரூர் ஏரியின் பெரும் பகுதியை, சாராய உடையார் குடும்பத்துக்குச் சொந்தமான ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரியைக் கட்டுவதற்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு தாரை வார்த்துக் கொடுத்தார், எம்.ஜி.ஆர். அவர் மறைந்த பிறகு தமிழகத்தின் மீது திணிக்கப்பட்ட எம்,ஜி.ஆரின் மனைவி ஜானகி ஆட்சியில் பொதுச்சொத்துக்களை ஆக்கிரமிக்கும் இந்தக் கொள்ளை அதன் உச்சத்தைத் தொட்டது.

இந்த மழைக் காலத்திற்கு முன்பு போரூர் ஏரியின் 17 ஏக்கர் பரப்பை ஆக்கிரமிக்க முயன்ற ராமச்சந்திரா மருத்துவ பல்கலைக்கழகத்தின் திருட்டுத்தனத்தைப் பொதுமக்கள் எதிர்த்து நின்று முறியடித்தனர்.

- தமிழகத்தில் இந்து மதவெறிக் கும்பலுக்குப் பல்லக்குத் தூக்கிவரும் பச்சமுத்து நடத்திவரும் எஸ்.ஆர்.ஆம். குழுமக் கல்லூரிகள் பொத்தேரி முதலான பல ஏரிகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஏரித் திருடனுக்குச் சொந்தமான ''புதிய தலைமுறை'' தொலைக்காட்சியோ சென்னை வெள்ளக் காடானதற்கு யார் காரணம் என்ற விவாதத்தை நடத்தியது.

- இந்து மதவெறிக் கும்பலின் இன்னொரு அடிவருடியான ஏ.சி.சண்முகத்துக்குச் சொந்தமான சென்னை-மதுரவாயலில் உள்ள எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம் கூவம் ஆற்றை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருக்கிறது.

வலசை செல்லும் பறவைகளுக்கு இனப்பெருக்க பூமியாகவும், ஏராளமான நீர்த் தாவரங்கள், மீன்கள், நுண்ணிய முதுகெலும்பு இல்லா உயிரினங்கள் வசிக்கும் பல்லுயிர் சூழல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதி இவை. நன்னீர் சதுப்பு நிலம் என்பது அரிதினும் அரிதானவை. அப்படிபட்ட நன்னீர் சதுப்பு நிலமான பள்ளிக்கரணையை அரசும், ரியல் எஸ்டேட் மாஃபியாக்களும், ஐ.டி. நிறுவனங்களும் கூறு போட்டு, அதன் பெரும்பகுதியை நாசப் படுத்திவிட்டன. (பார்க்க: பெட்டிச் செய்தி)



குட்டை போலத் தேங்கி நிற்கும் வெள்ள நீருக்குள்ளேயே வசிக்க வேண்டிய கட்டாயத்தில் பொழிச்சலூர் பகுதி மக்கள்.

வேளச்சேரி மற்றும் ஆதம்பாக்கம் ஏரிகளின் உபரி நீர் வீரங்கால் ஓடை வழியாக பள்ளிக்கரணை சதுப்பு நிலத்துக்குச் செல்லும். இந்த ஓடையின் பெரும்பகுதி இன்று காணாமல் போய்விட்டது. பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ஒருபுறம் நீரைச் சேமித்து வைத்துக் கொண்டு, மறுபுறம் உபரி நீரை சிறிது சிறிதாக ஒக்கியம் மடு வழியாக வெளியேற்றுகிறது. இப்படி வெளியேறும் நீர் பக்கிங்காம் கால்வாய் வழியாகக் கடலுக்குள் செல்கிறது. இந்த ஒக்கியம் மடுவை அடைத்து தனியார் பொறியியல் கல்லூரி கட்டிடங்களை எழுப்பி வைத்திருக்கிறது. 389.47ஹெக்டேர் பரப்பளவு கொண்டிருந்த வேளச்சேரி ஏரி புதிய குடியிருப்புகளாலும், ஃபீனிக்ஸ் (Phoenix Mall) மாலாலும், ரானே கம்பெனி, உணவு விடுதிகள் உள்ளிட்ட வணிக நிறுவனங்களாலும், 100 அடி சாலையாலும் ஆக்கிரமிக்கப்பட்டு 85.8 ஹெக்டேராகச் சுருங்கிவிட்டது. 100.92 ஹெக்டேரில் விரிந்துகிடந்த ஆதம்பாக்கம் ஏரி 13.68 ஹெக்டேராகச் சுருங்கிக் கிடக்கிறது. இதன் எதிர்விளைவாகத்தான் படகு விடுமளவிற்கும், ஹெலிகாப்டர் மூலம் உணவுப் பொட்டலங்களைப் போடும் அளவிற்கும் வேளச்சேரி, முடிச்சூர் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

‘‘அடையாறின் வெள்ள நீர் வடிநிலத்தின் மீதுதான் புதிய விமான நிலையம் எழுந்து நிற்கிறது. கோயம்பேடு வடிநிலப் பகுதி கோயம்பேடு பேருந்து நிலையமாகவும், கோயம்பேடு மார்க்கெட்டாகவும் உருமாறி நிற்கிறது. பக்கங்ஹாம் கால்வாயை ஆக்கிரமித்துதான் பறக்கும் ரயில் நிலையங்களும், அந்த ரயில் ஓடுவதற்கான பாலங்களும் கட்டப்பட்டுள்ளன. இதனால் அடையாறு முகத்துவாரத்திலிருந்து கோவளம் முகத்துவாரம் வரையிலான தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயின் அகலம் 25 மீட்டரிலிருந்து 10 மீட்டராகக் குறுகிப் போனது.

‘‘தேசிய நெடுஞ்சாலை 45-ஐயும், தேசிய நெடுஞ்சாலை 4-ஐயும் இணைக்கும் சாலை கிழக்கில் வடியும் மழைநீரைத் தடுத்து அண்ணா நகர், போரூர், வான

● எம்.ஜி.ஆருக்கு கூஜா தூக்கி பிழைத்துவந்த மறைந்த திரைப்பட நடிகர் ஐசரிவேலன் மகன் ஐசரி கணேஷுக்குச் சொந்தமான வேல் பல்கலைக்கழகம் பல்லாவரம் ஏரியை ஆக்கிரமித்து வைத்திருக்கிறது.

● பெரும்பாக்கம் ஏரியையும் அதைச் சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமித்துதான் குளோபல் மருத்துவமனை மற்றும் விப்ரோ, ஹெச்.சி.எல். உள்ளிட்ட பல கார்ப்பரேட் நிறுவனங்களின் கட்டிடங்களும், மேட்டுக்குடியினர் வசிக்கும் வில்லா வகையிலான வீடுகளும் கட்டப்பட்டுள்ளன.

● பெரும்பாக்கம் ஏரி அருகில் இந்தியா புல்ஸ் என்ற பிரம்மாண்டமான அடுக்குமாடி குடியிருப்பு அமைந்திருக்கிறது. பெரும்பாக்கம் ஏரி நிரம்பினால் அதன் உபரி நீர் இந்தியா புல்ஸ் குடியிருப்பு வழியாகத்தான் வெளியேற வேண்டும். ஆனால், அந்த அடுக்குமாடிக் குடியிருப்பைக் கட்டிய நிறுவனம் அக்குடியிருப்பைச் சுற்றி சுவர் எழுப்பியதால், வெள்ள நீர் மெயின் ரோட்டுக்கு வந்துவிட்டது. இந்த இடங்களில் எல்லாம் 6 அடி முதல் 10 அடி வரை வெள்ள நீர் தேங்கியிருந்தது.

● வேளச்சேரியில் அமைந்துள்ள பிரம்மாண்டமான போனிக்ஸ் மால் 10 ஏக்கர் அளவிற்கு ஏரியை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆக்கிரமிப்பு 100 ஏக்கர் நிலத்தைப் பாழ்படுத்தியிருக்கிறது. ஜெயா-சசி கும்பல் வாங்கியிருக்கும் லுக்ஸ் திரையரங்குகள் இந்த மாலில்தான் அமைந்துள்ளன.

● பன்னாட்டு கார் கம்பெனியான ஃபோர்டு நிறுவனத்தின் தொழிற்சாலை இரண்டு குளங்களையும், மஹிந்திரா சிட்டி மூன்று குளங்களையும் தூர்த்து அமைந்துள்ளன.

● செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் பிடிப்பு பகுதிகளில் ஹுண்டாய் உள்ளிட்ட ஆட்டோமொபைல் தொழிற்சாலைகள் உருவாகியுள்ளன.

● 2006 வரை விளைநிலங்களாகவும் ஏரிகளாகவும், நீர்பிடிப்புப் பகுதியாகவும் இருந்த ஒரகடம் இன்று டெய்ம்லர், பென்ஸ், ரெனோ நிசான் ஆகிய பன்னாட்டு நிறுவனங்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது.

● நிர்வாகத்தின் அலட்சியத்தால் 15-க்கும் மேற்பட்ட நோயாளிகள் இறந்துபோன மியாட் மருத்துவமனை மணப்பாக்கம் ஏரியை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருக்கிறது.

கரம், மதுரவாயில், முகப்பேர், அம்பத்தூர் போன்ற பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்தது. கொரட்டூர், அம்பத்தூர் ஏரிகள் நிரம்பிய பின் வெளியேறக்கூடிய உபரிநீர் கால்வாய்கள் மாயமாகிவிட்டன. விருகம் பாக்கம், பாடி, வில்லிவாக்கம் ஏரிகளுக்கான முக்கிய வெள்ளநீர் வடிநிலப் பகுதிகள் தூர்ந்து போய்க்கிடக் கின்றன'' என சென்னையை வெள்ளக்காடாக்கிய காரணிகளைப் பட்டியல் இடுகிறார், சுற்றுச்சூழல் ஆர்வலர் நித்தியானந்த் ஜெயராமன்.

''தற்பொழுது 471 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ள சென்னையை 1,171 சதுர கிலோமீட்டர் பரப்பு கொண்ட நகரமாகவும், அதன்பிறகு 8,000 சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்ட நகரமாகவும் வளர்ப்பதற்கான திட்டங்களை அரசு தயாரித்துக் கொண்டிருப்பதாக''க் கூறும் தெற்காசிய நீர் ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் ஜனகராஜன், ''சென்னை மாஸ்டர் பிளான் இரண்டில் நீர் ஆதாரங்களைக் காப்பதற்கு எந்தத் திட்டமும் கிடையாது'' என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். சென்னை நகர மக்கள் எதிர்காலத்தில் எத்தகைய பேரபாயத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை அவரது கூற்று எடுத்துக் காட்டுகிறது.

## மழைநீர் வடியாமல் போனது ஏன்?

சென்னையிலிருந்த நீர்நிலைகளுள் பெரும் பாலானவை அழிக்கப்பட்டுவிட்டதால், வெள்ளம், வறட்சி என்ற இரண்டு துயர் களை மாறிமாறிச் சுமந்து தீர வேண்டிய நிலையில் அந் நகர மக்கள் நிறுத்தப் பட்டுள்ளனர். மழைக் காலங்களில் கிடைக்கும் நீரைச் சேமித்து வைக்கக் கூடிய நீர்நிலைகளை 'வளர்ச்சிக்காக'ப் பலி கொடுத்துவிட்ட பிறகு, வெள்ள நீரைக் கடலுக்குள் கொண்டுபோய் சேர்ப்பதில் மட்டும்தான் அரசும், நிபுணர்களும் கவனம் செலுத்தி வருகிறார்கள். இதற்காகவே சென்னையில் 1,860 கி.மீ. தூரத்துக்கு மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. ''மழை நீரைச் சேமித்து வைக்க முடியாமல் அதனைக் கடலுக்குள் கொண்டு சேர்த்துவிட்டு, பிறகு கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டங்களை நாம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். எத்தகைய முட்டாள் தனம் இது'' எனத் தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் நிபுணர் ஒருவர் குத்திக் காட்டினார்.

''சென்னையிலுள்ள மழை நீர் வடிகால்களை ஜூன், ஜூலை மாதங்களில் ஒரு சுற்றும், ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் இரண்டாவது சுற்றும் தூர்வார வேண்டும். வடிகாலின் மேற்பகுதியில் உள்ள நுண் துளைகளைச் சுத்தம் செய்ய வேண்டும். இந்த வடி கால்கள் வழியாகச் செல்லும் மழை நீர் சென்னையில் உள்ள 8 பிரதான கால்வாய்களில் போய்ச் சேர வேண்டும். மாம்பலம் கால்வாய், விருகம்பாக்கம் கால் வாய், அடையாறு, கூவம் உள்ளிட்டு இந்த எட்டு கால் வாய்களையும் மழைக் காலத்திற்கு முன்பு சுத்தமாக வைத்திருக்க வேண்டும்'' என மழைக்கால முன்னெச் சரிக்கை நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு இருக் கிறார், சென்னை மாநகராட்சியின் முன்னாள் ஆணையர் எம்.பி.விஜயகுமார் (குமுதம் ரிப்போர்டர், 01.12.2015). இவற்றுள் ஒன்றைக்கூட சென்னை மாநகராட்சி உருப்படியாகச் செய்யவில்லை என்பதை இந்த மழை எடுத்துக்காட்டிவிட்டது. சென்னையில் மழைநீரை கடலுக்கு எடுத்துச் செல்லும் 16 கால்வாய் களைத் தூர்வாரி பத்தாண்டுகள் ஆகிவிட்டதாகக் கூறு கிறது, தினமணி (24.11.2015)

மழைநீர் வடிகால்களைத் தூர் வாராதது மட்டு மல்ல, அவை முறையாகவே கட்டப்படவில்லை என் கிறார் பொதுப்பணித் துறையின் முன்னாள் சிறப்புப் பொறியாளர் அ.வீரப்பன். ''மழைநீர் வடிகால்கள் திட்டமின்றியும் தரக்குறைவாகவும் கட்டப் பட்டுள்ளன; அவ்வடிகால் கள் தானே ஓடக்கூடிய வாட்டத்துடன் கட்டப்பட வில்லை; அவ்வடிகால்கள் அருகிலுள்ள கால்வாய்கள், கூவம், ஓட்டேரி நல்லா போன்ற கால்வாய்கள், சிற்றாறுகளுடன் இணைக் கப்படவில்லை'' என அவர் மழைநீர் வடிகால்களின் தரத்தைப் புட்டு வைத்திருக் கிறார். (ஜூ.வி.29.11.15)

''மழைநீர் வடிகால்கள் அமைக்கும் முன்பு, அந்தப் பகுதியில் பருவ மழை காலத்தில் பெய்யும் மழை யின் அளவு, மழைநீர் வடி கால் கால்வாயில் இணைக் கப்படும் வழித்தடம் மற்றும் எவ்வாறு அந்தப் பகுதியில் தண்ணீர் தேங்குகிறது என் பதை ஆய்வு செய்ய வேண்டும். 25 ஆண்டு களுக்கு முன்பு வரை இந்தப்

வெள்ளக்காடான அம்பத்தூர் தொழிற்பேட்டையின் ஒரு பகுதி.



பணிகளைச் செய்ய சென்னை மாநகராட்சியில் தனியாகப் பொறியாளர் குழு இருந்தது. இப்போது அந்தக் குழுவே இல்லை. அதனால்தான், தன் வாட்டத்தில் மழை நீர் வடிந்துவிடும் சாலைகளோ, தெருக்களோ, வடிகால்களோ அமைக்கப்படுவது இல்லை. கடமைக்காக, ஒப்பந்தம் கிடைத்துவிட்டது என்பதற்காக எதையோ செய்கிறார்கள். அதன் விளைவை - மழைநீர் வெள்ளமாகச் சாலைகளில் தேங்குவது; மழைநீரோடு கழிவு நீரும், மனிதக் கழிவுகளும் சேர்ந்து ஓடுவது - இப்போது மக்கள் அனுபவிக்கிறார்கள்'' என்கிறார், சென்னை மாநகராட்சி ஒப்பந்ததாரர் சங்கத் தலைவர் ராமாராவ். (ஜூ.வி.29.11.15)

மழைநீர் வடிகால்களையும், கழிவுநீர் வடிகால்களையும் புதிதாக அமைப்பதற்கும், பழையதைப் பராமரிப்பதற்கும் சென்னை மாநகராட்சி கடந்த மூன்றாண்டுகளில் கிட்டதட்ட 800 கோடி ரூபாயைச் செலவிட்டிருப்பதாக எழுதுகிறது, தினமணி (24.11.2015). மழைநீர் வடிகால்கள் முறையாக கட்டப்படுவதில்லை, முறையாக பராமரிக்கப்படவில்லை எனும்பொழுது, இந்தப் பணம் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், காண்டிராக்டர்கள் கூட்டணியின் பாக்கெட்டுகளைத் தவிர, வேறு எங்கு சென்றிருக்க முடியும்?

மழைநீர் வடிகால்கள் மட்டுமல்ல, சென்னையில் நீர் வழிந்தோடும் போக்குக்கு ஏற்ப சாலைகளும் அமைக்கப்படுவதில்லை. அதனால்தான் தி.நகர் போன்ற வணிகப் பகுதிகளில்கூட மழைநீர் பெருமளவு தேங்குகிறது. நீரோட்டத்தைக் கணக்கிட்டு குறிப்பிட்ட சாலையின் உயரத்தை இதற்கு மேல் உயர்த்தக் கூடாது என உத்தரவிட்டு, அதனை அரசு கண்காணிக்க வேண்டும். இல்லையென்றால், இன்னும் 10, 15 ஆண்டுகளில் சென்னையின் புராதனச் சின்னங்களாகக் கருதப்படும் கோயில்கள், மாநகராட்சி கட்டிடம், உயர்நீதி மன்றம், சாந்தோம் தேவாலயம் போன்றவை மழை நீர் தேங்கும் இடங்களாகிவிடும் என எச்சரிக்கிறார், சென்னை கட்டுமானப் பொறியாளர் சங்கத் தலைவர் கோ.வெங்கடாசலம்.

முறையாகவும், தரமாகவும் கட்டப்படாத மழைநீர் வடிகால்களும், மழைநீரைக் கடலுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சென்னையின் 16 கால்வாய்களும் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தூர்வாரப்படாத அவலம், நீர் வழிந்தோடும் போக்குக்கு ஏற்ப அமைக்கப்படாத சாலைகள் என்ற இந்த பலவீனமான அடிக் கட்டுமானத்தின் மேல்தான் பிரம்மாண்டமான மால்கள், மல்டிபிளெக்ஸ் திரையரங்குகள், நட்சத்திர விடுதிகள், ரிசார்ட்டுகள், தீம் பார்க்குகள், ஐ.டி. பூங்காக்கள், நூற்றுக்கணக்கான ஃபிளாட்டுகளைக் கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் சென்னையெங்கும் புற்றீசல் போல முளைத்து வருகின்றன.

## தனியாருக்குப் பட்டா போடப்பட்ட பள்ளிக்கரணை சதுப்பு நிலம்

250 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் பெய்யும் மழைநீருக்கான வடிகாலான பள்ளிக்கரணை சதுப்பு நிலம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு 50 சதுர கிலோமீட்டர் பரப்புக்குத் தண்ணீருடன் பரந்து கிடந்தது. ஆனால், இன்று அச்சதுப்பு நிலம் பல்வேறு ஆக்கிரமிப்புகளால் வெறும் 4.3 சதுர கிலோமீட்டராகச் சுருங்கிக் கிடக்கிறது. இச்சதுப்பு நிலத்தை இரண்டு கூறாகப் பிளந்து கொண்டு இரண்டு முக்கிய சாலைகள் - சோழிங்கநல்லூர்-பல்லாவரம் இணைப்புச் சாலை மற்றும் வேளச்சேரி-தாம்பரம் சாலை - அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு இடையே அமைக்கப்பட்டுள்ள சின்னச் சின்ன மதகுகள் மழை நீரை சதுப்பு நிலத்தின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்குப் போதுமானவையாக அமையவில்லை. இந்த சாலைகள் அமைக்கப்பட்டதால் சதுப்பு நிலத்தின் ஒரு பகுதி துண்டிக்கப்பட்டு, அது ரியல் எஸ்டேட் முதலைகளின் ஆக்கிரமிப்புக்குத் திறந்துவிடப்பட்டது.

பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்குள்தான் ''சென்னை ஒன்'' என்ற தகவல் தொழில்நுட்ப பூங்கா, சி.டி.எஸ். நிறுவனக் கட்டிடம், காமாட்சி மருத்துவமனை மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. நீர்நிலைகளின் மீது கட்டுமானங்களை அமைப்பதால் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடும் பணிகளைச் செய்யும் மைய அரசு நிறுவனமான தேசியக் கடல் தொழில்நுட்ப நிறுவனமும் இச்சதுப்பு நிலத்தின் விளிம்பில்தான் அமைந்திருக்கிறது. இச்சதுப்பு நிலத்தின் வடபகுதியை சென்னை மாநகராட்சி குப்பைக் கூளங்களைக் கொட்டித் தூர்த்துவிட்டது. இதனால் சதுப்பு நிலத்தின் 80 ஹெக்டேர் பரப்பளவு பாழ்பட்டுப் போய்விட்டது.

கடந்த பத்தாண்டுகளில் சென்னையின் புறநகர்ப் பகுதிகளான கொளத்தூர், விநாயகபுரம், உள்ளகரம், புழுதிவாக்கம், மடிப்பாக்கம், வேளச்சேரி, தரமணி, மேற்கு தாம்பரம் ஆகிய இடங்களில் 50 இலட்சம் முதல் 75 இலட்சம் சதுர அடி வரையில் குடியிருப்புகளும், வணிகக் கட்டிடங்களும் கழிவு நீர், மழை நீர் வெளியேற்றும் கட்டுமானம் இன்றி உருவாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, இந்த நவீனக் கட்டுமானங்கள் தமது கழிவு நீரைத் தாமே சுத்திகரித்துப் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு ஏற்ப நிபந்தனைகளை விதிக்க அரசு மறுத்து வருகிறது. இத்தகைய நவீன கட்டுமானங்களுள் பெரும்பாலானவை நீர்நிலைகளை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டிருப்பது ஒருபுறமிருக்க, தமது மழை நீரையும், கழிவு நீரையும் வெளியேற்ற இந்தப் பலவீனமான கட்டுமானத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றன. இந்த நிலைமைகள்தான் மழைக் காலங்களில் சென்னையை ஒரு மாநரகமாக மாற்றுகின்றன.

● குப்பன்

# ஆபாசம், அராஜகம், ரவுடித்தனம் இதுதான் அம்மா ஆட்சி!

**பருவ மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதையும் செய்யாமல் தமிழக மக்களைச் சாவிற்குள் தள்ளிய அ.தி.மு.க. அரசு, நிவாரண நடவடிக்கைகளை அம்மா இடும் பிச்சையாகக் கருதி நடந்துவருகிறது.**

''ஒரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி என்பது நின்றும், நீடித்தும் பெருமழை தரக்கூடியது'' என வரையறுக்கிறது வானிலை அறிவியல். ''இதனைப் பாமர மக்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கில்தான் கனமழை பெய்யும் என்று தாம் அறிவித்ததாகவும், கன மழை என்ற வார்த்தையைத் தமது துறை சாதாரணமாகப் பயன்படுத்துவதில்லை'' என்றும் விளக்கம் அளித்தார், வானிலை இயக்குநர் ரமணன்.

இதற்கு அப்பால், ''புவி வெப்பம் அதிகரித்து வருவதன் காரணமாக, வடகிழக்குப் பருவ மழையின் தன்மை மாறிவிட்டதாகவும், கடந்த பத்தாண்டுகளில் அப்பருவ மழை பெய்யும் காலஅளவு குறைந்துவிட்டதோடு, ஓரிரு நாட்களில் புயல் மூலம் பெருமழையைப் பொழியும்படி அதன் போக்கு காணப்படுவதாகவும்'' சுற்றுச்சூழல் நிபுணர்களும் ஆர்வலர்களும் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர்.

ஜெயா அரசு இவற்றுள் ஒன்றைக்கூடப் புரிந்துகொள்ளவுமில்லை; காதில் போட்டுக் கொள்ளவுமில்லை என்பதோடு, இப்பருவ மழையை எதிர்கொள்வதிலும் ஏரிகளிலிருந்து நீரைத் திறந்துவிடுவதிலும் அலட்சியமாகவும் ஆணவமாகவும் நடந்துகொண்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் மட்டும் 207 பேரை (அரசின் கணக்குப்படியே) பலியிட்டுள்ளது.

வடகிழக்குப் பருவமழை வழக்கமாக அக்.20 போல் தமிழகத்தில் தொடங்கும். இந்த முறை எட்டு நாட்கள் தாமதமாக அக்.28-இல் பருவ மழை தொடங்குமென அறிவித்தது, வானிலை ஆய்வு மையம். இந்த நேரத்தில் தலைநகரில் இருந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய ஜெயா, கோடநாட்டில், தனது எஸ்டேட் பங்களாவில் 28 நாட்கள் ஓய்வில் இருந்தார்.

தமிழகக் கடலோர மாவட்டங்களைப் புயல் தாக்கும் அபாயம் இருப்பதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்த பிறகும்கூட மலையில் இருந்து கீழே இறங்காத ஜெயா, தீபாவளிப் பண்டிகையைத் தனது போயசு பங்களாவில் கொண்டாடுவதற்காக, தீபாவளிக்கு முதல்நாள் சென்னைக்கு வந்தார்.

காற்றழுத்த தாழ்வின் காரணமாக அடைமழை பெய்து சென்னையிலும், கடலூரிலும், காஞ்சிபுரத்திலும், தமிழகத்தின் இன்ன பிற பகுதிகளிலும் நூற்றுக்கும் மேற்பட்ட பிணங்கள் விழுந்த பிறகு, நவம்பர் 12 அன்று கோட்டைக்குச் சென்று ஒரேயொரு மணி நேரம் அதிகாரிகளோடு உட்கார்ந்து இருந்துவிட்டு வந்ததை, வெள்ள நிவாரண ஆய்வுக் கூட்டம் நடைபெற்றதாக அறிவிக்கச் செய்தார்.

அதற்கும் ஒரு வாரம் கழித்துத் தன்னைத் தேர்ந்தெடுத்த ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள இரண்டு தெருக்களைக் கால்விரல் நுனிகூட நனையாமல், ஏ.சி. வேனில் அமர்ந்தபடியே எட்டிப் பார்த்துவிட்டுப் போனார். டிசம்பர் 3 அன்று ஹெலிகாப்டரில் இருந்தபடியே சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வெள்ளம் பாதித்த பகுதிகளை அவர் பார்வையிட்ட அதிசயம், ''மேலிருந்து பார்த்தால் எங்க அவதி தெரியுமா மேடம்?'' என பார்ப்பன ''தினமலர்'' கூட நக்கல் அடிக்கும் அளவிற்கு நடந்தது.

ஏ.சி. வேனுக்குள் அமர்ந்து கொண்டு சென்னை - ஆர்.கே. நகர் தொகுதியைப் பார்வையிடும் ஜெயா: இது அக்கறையா? வக்கிரமா?



இவற்றின் மூலம் தனக்கு நிகரான ஆணவமும் அலட்சியமும் நிறைந்த ஆட்சியாளர்கள் முன்பும் இருந்தது கிடையாது, இனியும் வரப்போவது கிடையாது எனச் சவால் விட்டிருக்கிறார், ஜெயா.

இது அதீதமான மதிப்பீடு என்று கருதுபவர்கள், வெள்ளத்தில் உடைமைகளை இழந்து, உறவினர்களை இழந்து வேதனையாலும், எதிர்காலம் குறித்த அச்சத்தாலும் கதறிக் கொண்டிருக்கும் மக்களைப் பார்த்து, ''வாக்காளப் பெருமக்களே'' என ஜெயா அழைத்ததை நினைவில் கொள்ள வேண்டும். ''இப்படி மழை கொட்டித் தீர்க்கும்பொழுது அரசாங்கத்தால் மட்டும் என்ன செய்துவிட முடியும்?'' எனத் தமக்குத் தாமே சமாதானம் செய்து கொள்ளும் அப்பாவிகளும் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆணவத்திலும் அலட்சியத்திலும் அம்மா எட்டடி பாய்ந்தால், அவரது குட்டிகள் பதினாறு அடி பாய்கின்றன.

- இந்தத் தகவல்-தொழில்நுட்ப காலத்தில் நேரடியாக ஆர்.கே.நகர் சென்று வெள்ளச் சேதத்தைப் பார்க்க வேண்டிய அவசியம் அம்மாவுக்கு இல்லை.

- கடலூரில் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன.

- மழை பெய்யும் என்றுதான் வானிலை அறிவிப்பு செய்தார்களே தவிர, 20 செ.மீ., 30 செ.மீ. அளவுக்கு மழை பெய்யும் என்று சொல்லவில்லை.

- மழை பெய்வதற்கு முன்பே எங்களை ஆயில் மோட்டாரைத் தூக்கிக்கொண்டு போய் தண்ணீரை உறிஞ்சச் சொல்கிறீர்களா?

- அம்மாவின் திறமையால் இத்துணை பாதிப்போடு நின்றுவிட்டது. இதற்காக சென்னை, கடலூர் மக்கள் அம்மாவுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள்.

- இவையெல்லாம் அ.தி.மு.க. தலைவியை நத்திப் பிழைக்கும் நாஞ்சில் சம்பத்தும், சி.ஆர். சரசுவதியும் தொலைக்காட்சி விவாதங்களில், பாதிப்புக்குள்ளான மக்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களே என்ற கூச்சமோ, அச்சமோ இன்றி உதிர்த்த வார்த்தைகள். வார்த்தைகளில் மட்டுமல்ல, நாஞ்சில் சம்பத்தின் உடல் மொழியிலும் ஆணவமும் அலட்சியமும் நிறைந்திருந்தது.

## நிவாரணம் என்ற அசிங்கம்

பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை ஏன் எடுக்கவில்லை என்ற கேள்விக்குப் பதில் சொல்ல மறுக்கும் ஜெயா அரசு, ''நிவாரண நடவடிக்கைகளைப் பாருங்கள் - கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள கடலூர் மாவட்டத்திற்கு ஆறு அமைச்சர்கள்; ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சிறப்பு ஐ.ஏ.எஸ். அதிகாரி என அரசாங்கம் செய்யக்கூடிய அனைத்தையும் அம்மா செய்கிறார்'' எனக் கூறித் தப்பித்துக் கொள்கிறது.

''டிசம்பர் 1-ஆம் தேதி இரவில் செம்பரம்பாக்கம் ஏரியை முன்னெச்சரிக்கை செய்யாமல் திறந்து விட்டார்கள்; முறையான எச்சரிக்கை செய்திருந்தால், குறைந்தபட்சம் ரேஷன் கார்டு உள்ளிட்ட முக்கியமான சான்றிதழ்களைக் காப்பாற்றிக் கொண்டு மேடான பகுதிக்குச் சென்றிருப்போம்'' எனக் குற்றஞ்சுமத்துகிறார்கள், சென்னை நகரவாசிகள்.

''டிசம்பர் 1-க்குச் சற்று முன்பாக அடுத்த இரு தினங்களில் சென்னையில் 500 மி.மீ. அளவுக்கு மழை பெய்யும் என்று பி.பி.சி. சேவை எச்சரித்தது. அதன் பின்னரும் மழை வெள்ள நீர் சூழும் என எதிர்பார்க்கப்படும் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையை வெளியிட்டு, மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றி அவர்களுக்கு உணவு, உறைவிடத்தை வழங்க அரசு தவறிவிட்டது'' எனக் குறிப்பிடுகிறது, ஜூ.வி. (9.12.15).

கடலூர் மாவட்டத்தில் வெள்ளத்தில் வீட்டை இழந்துவிட்டு அநாதரவாக நின்ற மக்களிடம் அரிசியையும் பருப்பையும் கொடுத்து சமைத்து சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள், அதிகாரிகள்.

''வக்கத்து நிக்கிறோம். மூவாயிரத்து ஐநூறு ரூவா நிவாரண உதவி கொடுக்குது அரசாங்கம். அதுவும் எல்லாருக்கும் கிடைக்கல. ரேசன் கார்டு இல்லாட்டினா இல்லங்குறாங்க அதிகாரிங்க. வூட்டையே வெள்ளம் அடிச்சிட்டுப் போயிட்டு. ரேசன் கார்டுக்கு எங்கய்யா போவோம்?'' எனக் குமுறுகிறார்கள் வெள்ளம் துடைத்துப் போட்ட பூதம் பாடி கிராம மக்கள். (இந்து, நவ.29, பக்.9)

''மகாராணி'' ஆர்.கே. நகருக்குச் செல்ல முடிவு செய்தவுடனேயே, அவர் செல்லும் வழி குப்பை, கூளம், தூசு தும்பின்றி சுத்தம் செய்யப்பட்டது.







''ஸ்டிக்கர் ஆட்சி'': நிவாரணப் பொருட்களில் 'அம்மா' படத்தை ஒட்டும் வக்கிரக்கூத்து (இடது).
ஜெயாவின் மூஞ்சி போட்ட பேனர்களைக் கட்டுவதற்காகப் பல மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்ட மருத்துவ அவசர ஊர்திகள்.

சிதம்பரம் அருகே நிவாரண உதவிகள் கேட்டும், குடிதண்ணீர் கேட்டும் சாலை மறியல் செய்த தாழ்த்தப் பட்டோர் மீது போலீசு நடத்திய காட்டுமிராண்டித்தன மான தாக்குதலில் ஒரு பெண்ணின் முதுகெலும்பு உடைந்து போனது; கொடுங்காயம் அடைந்த பாக்கிய ராஜ் என்ற மாற்றுத் திறனாளி சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

''ஆங்காங்கே பிரசவ வலி, காய்ச்சல்னு ஏகப்பட்ட வேதனைகள். அவசர உதவிக்கு கூப்பிடுங்கனு மாவட்ட நிர்வாகம் கொடுத்த நம்பருக்குக் கூப்பிட்டா, வந்து பாக்குறோம்னு சொல்லிட்டு ஃபோனை வெச் சிடுறாங்க'' எனக் கூறுகிறார், கடலூர் தவளை நகரைச் சேர்ந்த நடராசன். (ஜூ.வி.9.12.15)

அமைச்சர் கோகுல இந்திரா சென்னையின் அரும் பாக்கம் பகுதியில் நடைபெறும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட வந்தபொழுது, அங்குள்ள இந்திரா காந்தி தெருவைச் சேர்ந்த முதியவர், ''பத்து நாளா வீட்டுக்கள் புகுந்த வெள்ள நீரோடு வாழ்ந்துகிட்டிருப் பதாக''ப் புகார் தெரிவித்தார். அதற்கு அமைச்சர், ''தண்ணீர் எடுக்க மோட்டார் வாகனம் வந்ததே'' எனப் 'பொறுப்பாக'ப் பதில் அளிக்க, ''அந்த வாகனம் தெரு முனையோட திரும்பிப் போயிடுச்சு'' என அந்த முதிய வர் நிலைமையை அமைச்சருக்குப் புரிய வைத்தார்.

இந்திரா காந்தி தெருவில் தேங்கி நிற்கும் தண் ணீரைக் காட்டி அமைச்சர் கேள்வி கேட்க, கவுன்சிலர், ''போன ஆட்சியில எதுவும் செய்யல மேடம். நாம வந்துதான் இந்த மழைநீர் வெளியேற வடிகால் அமைச்சிருக்கோம்'' என்று தூர்ந்துபோன துளையைக் காட்ட, அருகில் நின்றிருந்த அப்பகுதி மக்கள், ''அதில் தண்ணீர் போகவே மாட்டேங்குது'' என உண்மையைப் போட்டு உடைத்திருக்கிறார்கள்.

மக்கள் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நிவாரண உதவிகளுக்காகக் காத்துக்கிடந்த வேளை யிலும், நிவாரணப் பொருட்களில் அம்மா படத்தை ஒட்டித்தான் கொடுக்க வேண்டும், அவற்றை அம்மா வின் படத்தை முன்னே வைத்து அமைச்சர்களின் கையால்தான் வழங்க வேண்டும் என்பதற்காக அவ் வுதவிகளை உடனடியாக வழங்காமல் தாமதப்படுத்தி யிருக்கிறது, அ.தி.மு.க. கும்பல்.

குறிப்பாக, மூன்று கப்பல்களில் வந்த நிவாரணப் பொருட்களில் அம்மா படத்தை ஒட்ட முடியாது என்ப தற்காகவே அப்பொருட்களைப் பெற்று விநியோகிப் பதைத் தாமதப்படுத்தியிருக்கிறது, தமிழக அரசு. ''இதனால் ஒருநாள் முழுக்க தேவையில்லாமல் காத் திருக்க வேண்டியிருந்ததாக'' கடற்படை குற்றஞ்சு மத்துகிறது.

''நாங்கள் எங்கெல்லாம் சென்று பாதிக்கப்பட்டவர் களை மீட்க வேண்டும்; எந்தப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டும் என்று சரிவர வழிகாட்டுதல்கள் இல்லை'' என மீட்பு பணிக்கு வந்த இராணுவ மீட்புக் குழுவே குற்றஞ்சுமத்தும் அளவிற்கு 'பொறுப் போடு' நடந்துகொண்டிருக்கிறது, அம்மா அரசு.



இவற்றுக்கெல்லாம் மேலாக, சென்னையில் பல இடங்களில் நிவாரண உதவிகளைச் செய்த தன்னார்வத் தொண்டர்களைத் தாக்கி, அவர்களிடமிருந்த உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை அடித்துப் பிடுங்கும் அராஜகமும் ரவுடித்தனமும் அ.தி.மு.க. கவுன் சிலர்கள் தலைமையில் நடந்தது.

இந்த அட்டூழியங்களைப் பார்த்து நொந்துபோன தனது நண்பர் தனபால், ''எல்லாம் முடிந்த பின் வந்து பார்வையிடும் கடவுளாக மட்டுமே அவர்கள் காட்சியளிக்கின்றனர். அந்த தரிசனத்திற்கு ஏங்கும் நாங்கள், இழிபிறவிகள் ஆனோம்'' என்று முகநூலில் பதிவிட்டிருப்பதை எடுத்துக் காட்டுகிறார், மறைந்த அப்துல் கலாமின் அறிவியல் ஆலோசகராக இருந்த பொன்ராஜ். (தினமலர், 4.12.2015, பக்.2)

## திட்டங்கள்: பலன் யாருக்கு, பாதிப்பு யாருக்கு?

''இது எதிர்பாராமல் பெய்த மழை'' என வாய் கூசாமல் சொல்லும் ஜெயாதான், சட்டசபையில் சென்னையின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 600 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாக 110-ஆம் விதியின் கீழ் அறிவித்தார். இதோடு அமைச்சர்கள் தெரிவித்துள்ள திட்டங்களையெல்லாம் கணக்கில் கொண்டால் சென்னையின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மட்டும் இந்த ஆட்சியில் 2,500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகக் கணக்கு வருகிறது என்கிறார், தி.மு.க.வின் பொருளாளர் ஸ்டாலின். சென்னை முழுவதும் இருக்கக்கூடிய கழிவு நீர் குழாய்களை அகற்றி, பெரிதுபடுத்தி புதிய குழாய்கள் பதிக்க 1,500 கோடி ஒதுக்கி 2 ஆண்டு ஆகிறது. அது என்ன ஆனது எனக் கேள்வி எழுப்புகிறார், மார்க்சிஸ்ட் கட்சி எம்.எல்.ஏ. சவுந்திரராஜன். இவையெல்லாம் காகித அறிவிப்புகளா அல்லது ஒதுக்கப்பட்ட பணம் வேறு வழியில் கரைந்து போனதா என்ற கேள்விக்கெல்லாம் பதிலே இல்லை.

சென்னையில் மட்டும்தான் என்றில்லை, வெள்ளக்காடான பகுதிகள் ஒவ்வொன்றிலும் நீர் மேலாண்மை குறித்து அம்மா ஆட்சியின் அறிவிப்புகளும், நிறைவேற்றப்பட்ட திட்டங்களும் பல்லிளித்து நிற்கின்றன.

- வேதாரண்யத்தில் உள்ள வெள்ளப்பள்ளம் ஏரி 640 கோடி ரூபாய் செலவில் தூர்வாரப்படும் எனக் கடந்த ஆண்டு 110-ஆம் விதியின் கீழ் அறிவித்தார், ஜெயா. இந்த அறிவிப்பு காற்றோடு போனதால், வெள்ளப்பள்ளம் ஏரியில் சேமித்திருக்க வேண்டிய நீர் உபரியாக வெளியேறி, 3,000 ஏக்கர் நிலத்தை மூழ்கடித்துவிட்டது. இதனால் தலைஞாயிறு பகுதியைச் சேர்ந்த பக்கிரிசாமி என்ற விவசாயி தற்கொலை செய்து கொண்டார்.

- சென்னையை அடுத்துள்ள பூந்தமல்லிக்கு அருகேயுள்ள நேமத்தில் ஒரு டி.எம்.சி. தண்ணீரைத் தேக்கும் அளவிற்கு 80 கோடி ரூபாய் செலவில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டது. ஆனால், இத்தேக்கம் திறப்புவிழா காண்பதற்கு முன்பே, அதன் மதகுகளிலும் கரைகளிலும் விரிசல் விட்டு நின்றதால், மழை நீரைத் தேக்க இயலாமல் அந்த ஏரியில் சேமிக்க வேண்டிய நீர் செம்பரம்பாக்கம் ஏரிக்குத் திறந்துவிடப்பட்டது.

- நீர்வள-நிலவளத் திட்டத்தின் கீழ் 83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, 364 ஏரிகள் சீரமைக்கப்பட்டிருப்பதாகக் கணக்குக் காட்டியிருக்கிறது, அம்மா அரசு. அப்படிச் சீரமைக்கப்பட்டதாகச் சொல்லப்பட்ட ஏரிகள் அனைத்தும் இந்த வெள்ளத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் உடைந்து போய் நிற்கின்றன. (இந்து, டிச.8)

- செம்பரம்பாக்கம் ஏரியை ஆழப்படுத்தும் திட்டத்தில் 30 சதவீதப் பணிகள்கூட நிறைவேற்றப்படவில்லை. இதனால், டிசம்பர் 1 அன்று நள்ளிரவில் அந்த ஏரியிலிருந்து 18,000 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. மேட்டூர் அணையிலிருந்துகூட இவ்வளவு தண்ணீரை ஒரே சமயத்தில் வெளியேற்ற மாட்டார்கள். செம்பரம்பாக்கம் ஏரி உபரி நீர் குடியிருப்புகளின் வழியேதான் கடலுக்குள் செல்லும் எனத் தெரிந்தும் இவ்வளவு தண்ணீரைத் திறந்துவிட்டது கொலைக் குற்றத்துக்கு ஒப்பானது.



''அ.தி.மு.க.விற்கு ஓட்டுப் போடுவோம்'' என சத்தியம் வாங்கிக் கொண்டு நிவாரணப் பொருட்களை வழங்கும் அ.தி.மு.க.வின் கயமைத்தனத்தைக் கண்டித்து கடலூரில் பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

- பெரியபாளையம் அருகே திருக்கண்டலம் பகுதியில் கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே 33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட தடுப்பணை ஏனோ தானோவென்று கட்டப்பட்டதால், வெள்ளத்தின் சீற்றத்தைத் தாங்கும் திறன் இன்றி உடைந்துபோனது.

- தமிழக சட்டசபை தேர்தல் நேரத்தில் மதுராந்தகம் ஏரியைத் தூர்வாருவேன் என ஜெயா அளித்த வாக்குறுதி காற்றோடு போனதால், அந்த ஏரியிலிருந்து பல ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்பட்டது.

- ஆரணியாறு, திருவள்ளூர் கொசஸ்தலை ஆறு மற்றும் காஞ்சிபுரத்திலுள்ள நீர்நிலைகளைச் சீர்படுத்த தலா இரண்டே கால் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு,

## மக்களைக் காக்காத திட்டங்கள்!




அப்பணிகள் இப்பொழுதுதான் தொடங்கப் பட்டுள்ளன. அப்பணிகளை செப்டம்பருக்கு முன்பு முடிக்கத் திட்டமிட்டிருந்தால், சென்னை இந்தள விற்கு மிதந்திருக்காது.

● தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஜவஹர்லால் நேரு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விருகம்பாக்கம் கால்வாயைக் கூவத்தில் இணைப்பது, வீராங்கல் ஓடையை பக்கிங்காம் கால்வாயுடன் இணைப்பது மற்றும் புதிய மழைநீர் வடிகால்களை உருவாக்குவது, நீர்நிலைகளைப் பாதுகாப்பது உள்ளிட்டவற்றுக்காக 1,448 கோடி ரூபாய்க்குத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, அவை 25 சதவீதம் முடிக்கப்பட்டதாகவும், மீதமுள்ள பணிகளை தி.மு.க.வைத் தொடர்ந்து பதவியேற்ற அ.தி.மு.க. அரசு இரண்டு ஆண்டுகளில் முடித்திருந் தால் இந்தளவிற்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்காது எனக் குற்றஞ்சாட்டுகிறார், சென்னை நகர முன்னாள் மேயர் மா.சுப்பிரமணியன்.

இக்குற்றச்சாட்டை உறுதி செய்யும் வகையில், வேளச்சேரி, தரமணி பகுதிகளில் பாதாள மழைநீர் வடி கால் வசதி அமைக்கும் வகையில் விஜயநகர் தொடங்கி பக்கிங்காம் கால்வாய் வரை மேற்கொள்ளப் பட்ட பணிகள் முடிக்கப்படவில்லை எனக் கூறுகிறார், அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.எஸ்.ராம கிருஷ்ணன்.

மாநகராட்சியின் பரப்பளவு 174 சதுர கிலோ மீட்டரில் இருந்து 426 சதுர கிலோமீட்டராக அதிகரித்த பிறகு, விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் பல கோடி ரூபாய் மதிப்பில் சாலை, தெருவிளக்கு, மழை நீர் வடிகால், பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட பணி கள் இதுவரை எந்தப் பகுதியிலும் முடிந்தபாடில்லை எனக் குற்றஞ்சாட்டுகிறார்கள், சென்னை புறநகர் பகுதி களைச் சேர்ந்த பொதுமக்கள். (தினகரன்,21.11.2015, பக்.15)

நாலரை ஆண்டுகால அம்மா ஆட்சியின் குறுக்கு வெட்டுத் தோற்றம் இது. இந்த அலட்சியத்தால் சென்னையில் மட்டும் கடலுக்குள் அனுப்பிவிட்டு இழந்த நீரின் அளவு 10 டி.எம்.சி. (1000 கோடி கன அடி) எனக் கூறப்படுகிறது. இதற்கு இணையான வெள்ளம் சென்னை நகர மெங்கும் தேங்கி நிற்கிறது. அ.தி.மு.க. தலைவியால் அறிவிக்கப்பட்ட திட்டங் கள் ஏன் நடைமுறைக்கு வரவில்லை; திட்டங்கள் ஏன் மந்தமாக நடைபெறு கின்றன; நிறைவேற்றப்பட்ட திட்டங் கள் ஏன் பல்லிளித்துவிட்டன என்ற கேள்விகளுக்கெல்லாம் இந்த அரசு பதில் சொல்ல மறுக்கிறது; வெள்ளம் குறித்து விவாதங்களை நடத்தும் தொலைக்காட்சிகளும் இந்தக் குறிப் பான விவரங்களுக்குள் செல்ல மறுக் கின்றன. அ.தி.மு.க. அரசின் இந்த அலட்சியம் முதன்மையாக விவாதிக்கப் பட்டிருந்தால், அம்மா ஆட்சி என்பது கமிசன் ஆட்சி என்பது மீண்டும் அம்பலமாகியிருக்கும்.

இது மொட்டையான குற்றச்சாட்டு அல்ல. அ.தி.மு.க.வின் கீழுள்ள சென்னை மாநகராட்சியில் மழை நீர் வடிகால்களை அமைப்பதற்கு 22 காண்டி ராக்டுகளும், ரோடு போடுவதற்கு 21 காண்டிராக்டு களும் வெளிப்படைத் தன்மையின்றி மேஜை தீர் மானங்களாக (ஜெயா அறிவிக்கும் 110 விதி திட்டங் கள் போல) கொடுக்கப்பட்டிருக்கிறது.

சென்னை மண்டல நீர்வளத் துறை கண்காணிப்புப் பொறியாளராக இருந்த அதிகாரி கடந்த மே 31 அன்று ஓய்வு பெற்றதால், அதற்கு முன்பே இலஞ்சத்திற்கு ஆசைப்பட்டு கூவம் சீரமைப்புப் பணிக்காக 60 கோடி ரூபாய் பெறுமான டெண்டரை முடித்திருக்கிறார். இந்தப் பணம் முழுவதும் வீணாகிவிட்டதாகவும், இதில் முக்கிய பிரமுகரின் மகனும் சம்பந்தப்பட்டிருப் பதால் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கத் தயங்குவ தாகவும் எழுதுகிறது, தினகரன். (23.11.2015, பக்.15)

வெள்ள நிவாரணப் பணிகள் போன்ற அவசர கால உதவிகளுக்காக அரசால் செலவிடப்படும் தொகை தணிக்கை செய்யப்படாது என்பதால், 23,000 பேர் வெள்ள நிவாரண பணிகளில் ஈடுபட்டிருப்பதாக கணக்கு எழுதிவிட்டு, 15,000 பேரை மட்டும் அதிகாரி களும் ஆட்சியாளர்களும் ஈடுபடுத்துவதாகவும்; 2,000 ரூபாய் கூலியாகக் கொடுக்க வேண்டிய பணியாளர் களுக்கு ஐநூறு ரூபாயும், பிரியாணி பொட்டலமும், குவார்ட்டர் பாட்டிலும் வாங்கிக் கொடுத்துவிட்டு மீதியை கமிசனாக அடித்துக் கொள்வதாகவும்; தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் செய்யும் பணி களைக்கூட மாநகராட்சி செய்தது போல கணக்குக் காட்டுவதாகவும் தினகரன் நாளிதழ் அம்பலப்படுத்தி யிருக்கிறது.

இவையெல்லாம், ‘‘ஒரு நல்ல வறட்சியை அனை வரும் வரவேற்கிறார்கள்’’ எனப் பத்திரிகையாளர் சாய்நாத் குறிப்பிட்டதை நினைவுபடுத்துகின்றன. வறட்சிக்குப் பொருந்துவது அ.தி.மு.க.வின் வெள்ள நிவாரணத்துக்குப் பொருந்தாதா?

● திப்பு

## தமிழக வெள்ளம்:

# இயற்கை பேரிடர் அல்ல, தனியார்மயம் உருவாக்கிய அழிவு!

**தனியார்மயப் பொருளாதார வளர்ச்சிப் பாதையை நிராகரிக்காமல், விவசாய அழிவைத் தடுத்து நிறுத்தாமல், ஏரிகளைக் காப்பாற்றவும் முடியாது, வெள்ள அபாயத்தைத் தடுத்து நிறுத்தவும் முடியாது.**

''நீரின்றி அமையாது உலகு'' என்றார் திருவள்ளுவர். இதனை நமது முன்னோர்கள் நன்கு உணர்ந்தும் புரிந்தும் வைத்திருந்ததற்கு ஆதாரமாகத் திகழ்பவைதான் தமிழகத்தின் கிராமம் தொடங்கி நகரம் வரை காணப்படும் கண்மாய்களும், ஏரிகளும், குளங்களும். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரை தமிழகத்தில் ஏறத்தாழ 39,000 ஏரிகளும், 3,000 கோயில் குளங்களும், 5,000 ஊருணிகளும் இருந்ததாகப் பல்வேறு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றின் ஒட்டுமொத்த கொள்ளளவு தமிழகத்தில் இன்றுள்ள நவீன, பெரிய அணைக்கட்டுகளில் தேக்கப்படும் நீரின் கொள்ளளவைவிட அதிகம் என்று நீரியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். உதாரணத்திற்குச் சொன்னால், வைகை அணையின் கொள்ளளவு 614 கோடி கன அடி; காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியின் கொள்ளளவு 364 கோடி கனஅடி.

ஏரிகளைப் பூமியின் கண்கள் என நமது முன்னோர்கள் கொண்டாடியிருக்கின்றனர். மேலும்,ரெட்டெரி, பொன்னேரி, நாங்குனேரி என ஏரிகளின்; குருங்குளம், பரம்பிக்குளம் எனக் குளங்களின்; காரைவாய்க்கால், ஆழிவாய்க்கால் என வாய்க்கால்களின்; அடையாறு, கொள்ளிடம், பவானி என ஆறுகளின் பெயர்களையே ஊர்களின் பெயர்களாக இட்டதிலிருந்தே நமது முன்னோர்கள் இவற்றுக்கு கொடுத்திருந்த முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ள முடியும். இதன் மூலம் இவை அழிந்தால் அந்த ஊர்களும் அழியும் என்பதுதான் நமது முன்னோர்கள் மறைபொருளாக உணர்த்தியிருக்கும் செய்தி.

நவீன வளர்ச்சியோ இந்தக் கண்களைக் கொத்திக் குதறிக் குருடாக்கிவிட்டு, அவற்றை நரம்புகளைப் போல பிணைத்திருந்த நீர்வழித் தடங்களையும் அறுத்தெறிந்துவிட்டுதான் எழுந்து நிற்கிறது. கடந்த நூறு ஆண்டுகளுக்குள்ளாகவே சுமார் 4,000 முதல் 6,000 ஏரிகள் காணாமல் போய்விட்டதையும் பல நூற்றுக்கணக்கான ஏரிகள் தூர்ந்துபோய் அழியும் நிலையில் இருப்பதையும் சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதிலும், தனியார்மயம்-தாரளமயம் புகுத்தப்பட்டு, ரியல் எஸ்டேட் துறையின் வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியின் அடையாளமாகக் காட்டப்பட்ட பிறகு, இந்த அழிவு மிகவும் துரிதமாக நடைபெற்றிருக்கிறது.

''தமிழ்நாட்டில் இருந்த 39,200 கண்மாய்களில் 10% கண்மாய்கள் ஆக்கிரமிப்பு காரணமாகவும், நகரமயமாதல் காரணமாகவும் அழிந்து போய்விட்டன.

சென்னையின் செயற்கையான, அராஜக வளர்ச்சி:
செம்மஞ்சேரி பகுதியிலுள்ள பிரம்மாண்டமான அடுக்குமாடிக் குடியிருப்புகள்.





அடையாறின் வெள்ள நீர் வடிநிலத்தை ஆக்கிரமித்து உருவாகியுள்ள சென்னை புதிய விமான நிலையம்.

நீதி மன்றக் கிளை இருக்கும் இடம், முன்பு உலகனேரி கண்மாயாக இருந்தது. தல்லாகுளம் கண்மாயின் அழிவின் மேல்தான் மதுரை மாந கராட்சி, சட்டக்கல்லூரி, வணிக வரி அலுவலகங்கள் அமைந்துள்ளன.

சேலத்தில் இருந்த அச்சுவான் ஏரி அந்நகர புதிய பேருந்து நிலையமாகி விட்டது. பேராந்தி ஏரி காந்தி விளை யாட்டு மைதானமாகிவிட்டது. பூலா வரி ஏரி சாக்கடையாகிவிட்டது. தாது பாய்குட்டை, கொல்லங்குட்டை உள்ளிட்ட சில ஏரிகள் தூர்ந்துபோய் காணாமல் போய்விட்டன.

மொத்தக் கொள்ளளவில் 22% நீரை சேர்த்துவைக்கத் திறனுள்ள தமிழக கண்மாய்கள் தற்போது 30% தூர்ந்து போயுள்ளதால், 15% மட்டுமே தேக்க முடிகிறது'' எனக் கூறுகிறார் சர்வதேச நீர் மேலாண்மை மையத்தின் (International Water Management Institute) இயக் குனரான பழனிச்சாமி. சென்னையும், கடலூரும் வெள்ளக்காடானதன் காரணம் இதில்தான் புதைந் திருக்கிறது.

## ஏரிகளை அழித்து உருவாக்கப்பட்ட நகர வளர்ச்சி

நீதிமன்றம், பேருந்து நிலையம், குடியிருப்புகள், விரைவுச் சாலைகள், இணைப்புச் சாலைகள் உள்ளிட்ட அரசின் திட்டங்கள்; அடுக்குமாடிக் குடி யிருப்புகள், தனியார் கல்லூரிகள், பல்கலைக்கழகங் கள், தொழில்நுட்ப பூங்காக்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங் கள் உள்ளிட்ட தனியார்துறையின் திட்டங்களுக்கு கண்மாய்களும், நீர்வழித் தடங்களும் மட்டுமல்ல, சதுப்பு நிலக் காடுகளும்கூடப் பலி யாகியிருக்கின்றன.

நவீன சென்னை நீர்வழித் தடங்கள் மேல் எழுந்து நிற்பதை இவ்விதழில் பல்வேறு ஆதாரங் களோடு சுட்டிக் காட்டியிருக் கிறோம். தமிழகத்தின் மற்ற நக ரங்களும்கூட சென்னை சந்தித் திருக்கும் அபாயத்தை இன்றோ அல்லது நாளையோ எதிர் கொள்ள வேண்டிய நிலையில் தான் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

37 கண்மாய்கள் இருந்த மதுரை நகரில் இன்று ஏழு கண் மாய்கள் மட்டுமே எஞ்சி உள்ளன. அவ்வூரில் இன்று சென்னை உயர்

**ஆக்கிரமிக்கப்பட்ட சென்னை புறநகர் ஏரிகள்**

| | உண்மையான பரப்பளவு | ஆக்கிரமிப்பு அளவு |
|---|---|---|
| | (ஹெக்டேரில்) | |
| விருகம்பாக்கம் | 114.53 | 114.28 |
| போரூர் | 229.60 | 115.08 |
| பீர்க்கங்கரணை | 63.58 | 40.15 |
| உள்ளகரம் | 48.56 | 22.31 |
| பாவேரிப்பட்டு | 43.06 | 24.54 |
| வளசரவாக்கம் | 74.87 | 29.07 |
| மதுரவாயல் | 287.33 | 14.97 |
| தலக்காஞ்சேரி | 63.16 | 27.31 |
| ஆதம்பாக்கம் | 100.92 | 13.68 |
| வேளச்சேரி | 389.47 | 85.08 |
| அயனம்பாக்கம் | 244.13 | 44.35 |
| கோலடி | 68.42 | 14.22 |
| கொரட்டூர் | 403.24 | 16.76 |
| செந்நீர்க்குப்பம் | 105.28 | 17.40 |

விழுப்புரம் நகரின் புதிய பேருந்து நிலையம், ஒருங் கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள், அரசு மருத்துவக் கல்லூரி ஆகியவை பழைய விழுப்புரத்தை ஒட்டி யிருந்த கண்மாய்களைத் தூர்த்துதான் உருவாக்கப் பட்டுள்ளன.

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் வேந்தான் என்ற குளத்தை ஆக்கிரமித்து உருவாக்கப் பட்டது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை ஒட்டியுள்ள 1,300 ஏக்கர் பரப்பைக் கொண்ட மிகப் பெரிய குளமான கோரம்பள்ளம் கடந்த 111 ஆண்டு களாகத் தூர்வாரப்படவில்லை. ''அக்குளம் தூர்வாரப் பட்டிருந்தால், அக்குளத்திலிருந்து வெளியேறும் உபரி நீர் செல்லும் பாதையான உப்பாத்து ஓடை ஆக்கிரமிப் புகள் அகற்றப்பட்டிருந்தால் தூத்துக்குடி வெள்ளத்தில் மூழ்கியிருக்காது'' என்கிறார் முன்னாள் மாவட்ட விவசாய சங்கத் தலைவர் அழகு.

1970-க்கு முன்னர் காஞ்சிபுரம், திருவள்ளூர் பகுதி களையும் உள்ளடக்கியிருந்த செங்கல்பட்டு மாவட்டத்திற்கு ஏரிகளின் மாவட்டம் என்ற சிறப்புப் பெயரே உண்டு. செங்கல்பட்டு மாவட்டத்தை மேலிருந்து பறவை பார்வையில் பார்த்தால், அம்மாவட்டத்தி லிருந்த ஏரிகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று இணைக்கப் பட்டு தாமரைத் தடாகம் போலக் காட்சியளித்திருக்கிறது. ஆனால், இன்றைய நிலை வேறு. செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் சென்னை ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் ஏறத்தாழ 2,400 ஏரிகள் காணாமல் போய்விட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இவை எப்படி மாயமாகின? தமிழகத்திலுள்ள மொத்த பொறியியல் கல்லூரிகளுள் பாதிக்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளும், தனியார் பல்கலைக்கழகங்களும் இந்த மூன்று மாவட்டங்களில்தான் அமைந்துள்ளன என்ற உண்மையை இணைத்துப் பார்த்தால், ஏரிகளை ஆக்கிரமித்திருக்கும் முதன்மைக் குற்றவாளிகள் யாரென்று தெரிந்துவிடும். இந்த மழை அந்த உண்மையைப் புட்டுவைத்திருக்கிறது.

காஞ்சிபுரம் மாவட்டம்-காட்டாங்குளத்தூரில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம். பொறியியில் கல்லூரி வளாகத்தில் புகுந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட மாணவர்கள் ஹெலிகாப்டர்கள் மூலம் மீட்கப்பட்டுள்ளனர். சென்னையை அடுத்துள்ள குன்றத்தூரில் அமைந்துள்ள மாதா பொறியியல் கல்லூரியில் நிறுத்தப்பட்டிருந்த கல்லூரி பேருந்துகள் குப்புற கவிழும் அளவிற்கு, அக்கல்லூரி வளாகத்திற்குள் வெள்ளம் பாய்ந்திருக்கிறது. சென்னையை அடுத்துள்ள போரூர் பகுதியில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர மியாட் மருத்துவமனையின் முதல் தளம் மூழ்கும் அளவிற்கு வெள்ளம் பாய்ந்திருக்கிறது. இவையெல்லாம் உணர்த்தும் உண்மை என்னவென்றால், இந்த நவீன மருத்துவமனைகளும், பொறியியல் கல்லூரிகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் இல்லையென்றால் அம்மூன்று மாவட்டங்களிலும் இந்த அளவிற்கு உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டிருக்காது என்பதே.

**இந்த வெள்ளச் சேதத்தால் ஏற்பட்ட உயிர் இழப்பு, பொருள் இழப்பு குறித்து எந்த விசாரணையும் நடைபெறப் போவதில்லை. இந்தக் குற்றத்திற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பது நம் கண் முன்னே தெரிந்தும்கூட, இயற்கையின் மீது பழிபோட்டு அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.**

மித்தும் அழித்தும் எழுந்து நிற்பதாகக் கூறுகிறது, ஒரு புள்ளி விவரம்.

இந்த வளர்ச்சியைச் சாதிப்பதற்கு அரசும், தனியாரும் இயற்கையை மட்டுமல்ல, மனித உயிர்கள் அநியாயமாகக் கொல்லப்படுவதைக்கூட தயங்காமல் செய்ததை மௌலிவாக்கம் கட்டிடம் சரிந்து விழுந்து, அறுபதுக்கும் மேற்பட்ட உயிர்கள் கொல்லப்பட்ட போது கண்டோம். இப்பொழுது இந்த வெள்ளப் பெருக்கின் காரணமாக சென்னையில் மட்டும் பல நூறுக்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகியிருக்கின்றன. சாதாரண உழைக்கும் மக்கள் மட்டுமின்றி, நடுத்தர வர்க்கம் கூட தமது உடைமைகளை இழந்து நிற்கின்றனர். கடலூரிலும், டெல்டா மாவட்டங்களிலும் பல நூறு கோடிக்கணக்கான ரூபாயில் பயிர்ச் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

மௌலிவாக்கம் கட்டிட விபத்து குறித்தாவது ஒரு மோசடியான விசாரணைக் கமிசனும், ஆமை வேகத்தில் நகரும் வழக்கும் உள்ளன. ஆனால், இந்த வெள்ளச் சேதத்தால் ஏற்பட்ட உயிர் இழப்பு, பொருள் இழப்பு குறித்து எந்த விசாரணையும் நடைபெறப் போவதில்லை. இந்தக் குற்றத்திற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பது நம் கண் முன்னே தெரிந்தும்கூட, இயற்கையின் மீது பழிபோட்டு அவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். அது மட்டுமல்ல, குற்றவாளிகள் - ரியல் எஸ்டேட்-கட்டுமான நிறுவனங்கள், கவுன்சிலர்கள் உள்ளிட்ட ஓட்டுக்கட்சி பிரமுகர்கள், அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் நடுத்தர வர்க்கத்தினர் உள்ளிட்டோர் - அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு நமக்கே தெரியாமல் இப்படி நடந்துவிட்டது

## விவசாய நசிவும் ஏரிகளின் அழிவும் – தனியார்மயத்தின் இரு பக்கங்கள்

சென்னை நகரத்திற்கு வேலை தேடி வரும் கிராமப்புற ஏழைகள் கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் உள்ளிட்ட நீர்வழித் தடங்களில் குடிசைப் போட்டுக் கொண்டு தங்குவதை ஆக்கிரமிப்பு எனச் சாடும் அரசும், கார்ப்பரேட் நிபுணர்களும், நடுத்தர வர்க்க கனவான்களும் கண்மாய்களும் நீர்வழித் தடங்களும் அழிக்கப்பட்டதை, ஆக்கிரமிக்கப்பட்டதை 'வளர்ச்சி' எனக் கூசாமல் நியாயப்படுத்துகின்றனர். கடந்த இருபதாண்டுகளில் உருவான நகர வளர்ச்சியில் 47 சதவீதம் நீர்நிலைகளை ஆக்கிர

ஆற்றைப் பாதுகாக்கும் அரசின் இலட்சணம்: சேலம் நகரின் மத்தியில் ஓடும் திருமணிமுத்தாறின் கரைகளைக் காங்கிரீட் பூசி, அதனைச் சாக்கடையாகவும் குப்பைத் தொட்டியாகவும் மாற்றிவிட்டது சேலம் மாநகராட்சி.



போலவும், ஒருவர் இன்னொருவர் மீது பழிபோட்டு தப்பிக்கப் பார்ப்பதும் நம் கண் முன்னே தொலைக்காட்சி விவாதங்களில் நடக்கிறது. அசோசெம் என்ற தரகு முதலாளிகளின் சங்கம் திட்டமிடப்படாத வளர்ச்சிதான் எல்லாவற்றுக்கும் காரணம் என முராரி பாடும் அயோக்கியத்தனத்தையும் ஊடகங்கள் எவ்வித விமர்சனமின்றி பிரசுரிக்கின்றன.

மேலை நாடுகளைப் போல, சிங்கப்பூர், மலேசியா போல இங்கும் திட்டமிட்ட நகர வளர்ச்சி ஏன் ஏற்படவில்லை என்பதற்கு நிபுணர்களும், நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளும் அரசியல்வாதிகளின் இலஞ்சம், ஊழல் மற்றும் அராஜகத்தைக் காரணமாக முன்வைக்கிறார்கள். இது பிரச்சினையின் ஒரு பகுதிதானே தவிர முழுமையல்ல. இந்த திட்டமிடப்படாத, அராஜக வளர்ச்சியின் ஆணிவேர் இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்படும் தனியார்மயம்-தாராளமயம்-உலகமயம் என்ற மறுகாலனியாதிக்கப் பொருளாதாரப் பாதையில் உள்ளது.

**திட்டமிட்ட நகர வளர்ச்சி ஏன் ஏற்படவில்லை என்பதற்கு நிபுணர்களும், நடுத்தரவர்க்க அறிவுஜீவிகளும் அரசியல்வாதிகளின் இலஞ்சம், ஊழல் மற்றும் அராஜகத்தைக் காரணமாக முன்வைக்கிறார்கள். இது பிரச்சினையின் ஒரு பகுதிதானே தவிர முழுமையல்ல.**

இத்தனியார்மயப் பொருளாதாரக் கொள்கை பொருள் உற்பத்தி சார்ந்த வளர்ச்சியின் இடத்தில் இறக்குமதியையும்; பங்குச் சந்தை சூதாட்டம், சுற்றுலா, வங்கி, காப்பீடு, மூல வளங்களை ஏற்றுமதி செய்வது, கால்சென்டர் மற்றும் மிக முக்கியமாக ரியல் எஸ்டேட் உள்ளிட்ட சேவைத் துறை வளர்ச்சியை முன்னிலைப்படுத்தியது. இது பொதுத்துறை நிறுவனங்கள் உள்ளிட்ட தொழிற்துறையைப் பெருமளவு பாதித்தது என்றால், பாரம்பரியமிக்க இந்திய விவசாயத்தை அழிவின் எல்லைக்கே கொண்டு சென்றது.

வெள்ளத்தில் மூழ்கிப் போன மாதா பொறியியல் கல்லூரியிலிருந்து மாணவர்கள் மீட்கப்படுகின்றனர்.



தனியார்மயம்-தாராளமயத்தின் பிறகான கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் (ஜி.டி.பி.) விவசாயத்தின் பங்கு அதளபாதாளத்திற்கு சரிந்திருப்பதும் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருப்பதும் இந்த அழிவின் சாட்சியங்களாக உள்ளன.

விவசாயத்திற்கு மானியம் அளிப்பது, விளைபொருட்களுக்கு அவற்றின் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப ஆதார விலையை நிர்ணயிப்பது, அத்தியாவசிய உணவுப் பொருட்களை அரசே கொள்முதல் செய்வது உள்ளிட்ட அரசின் ஆதரவு நடவடிக்கைகள் படிப்படியாக வெட்டப்பட்டதோடு, விவசாயத்திற்கு ஆதாரமான நீர்நிலைகளைப் பராமரிப்பது, மேம்படுத்துவது, புதிய நீர்நிலைகளை உருவாக்குவது - என விவசாயத் துறையில் இடப்படும் மூலதனம் பெயரளவு நிலைக்குச் சென்றது. கார்கள், வீடுகள் உள்ளிட்ட நுகர்வுப் பொருட்களுக்கு, அதாவது புதுப் பணக்காரர்களாக உருவான நடுத்தர வர்க்கத்திற்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்கிய பொதுத்துறை வங்கிகள், ஏழை-நடுத்தர விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதைப் புறக்கணித்தன.

இன்னொருபுறத்தில் ஏரி உள்ளிட்ட நீர்நிலைகளை காங்கிரீட் காடுகளாக மாற்றுவதற்கு ஏற்றவாறு, குடிநீருக்கும், பாசனத்திற்கும் பயன்தராத நீர்நிலைகளை பட்டா போட்டுக் கொடுக்கும் சட்டம் தமிழகத்தில் இயற்றப்பட்டது. இந்த சட்டம் வறட்சியினால் வறண்டு நிற்கும் கண்மாய்களை மட்டுமல்ல, பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைக்கூட ரியல் எஸ்டேட் நிறுவனங்களும் தரகர்களும் ஆக்கிரமித்துக் கொள்ளும் வாய்ப்பை அள்ளி வழங்கியது. கண்மாய்களை அழித்து உருவாக்கப்பட்ட குடியிருப்புகள் லேக் வியூ, ரிவர் வியூ எனக் கவர்ச்சிகரமான முறையில் சந்தைப்படுத்தப்பட்டன. எலி வளையானாலும் சொந்த வளை என்ற ஆசை கொண்ட நடுத்தர வர்க்கத்தினர் இந்த கவர்ச்சி விட்டிலில் மாட்டிக்கொண்டதோடு, கண்மாய்களை அழித்த குற்றத்திலும் பங்குதாரர்கள் ஆகி, இப்பொழுது செய்த ‘பாவத்திற்கு’த் தண்டனையை அனுபவிக்கின்றனர். சென்னை மாநகரம் வெள்ளத்தால் முற்றிலுமாக சேதாரப்பட்டு நிற்கும் இந்த நிலையில்தான் இந்தச் சட்டத்தை சென்னை உயர்நீதி மன்றம் ரத்து செய்தது.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, பொதுப் பயன்பாடு என்ற பெயரில் விவசாய நிலங்களை தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களும் கைப்பற்றிக் கொள்ளுவதற்கு ஏற்ப நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ள திருத்தங்கள் விவசாயத்தின் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாக இருக்கிறது.

விவசாயத்தின் நசிவையும் கண்மாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அழிக்கப்படுவதையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது. அது போல, தனியார்மயம்-தாராளமயம் கொண்டுவந்திருக்கும் இந்த செயற்கையான, அராஜகமான வளர்ச்சியையும், நாடாளுமன்ற அரசியல் மற்றும் ஓட்டுக்கட்சிகளின் சீரழிவையும் பிரித்துப் பார்க்க முடியாது. கட்சி பேதமின்றி அனைத்து ஓட்டுக்கட்சிகளிலும் ரியல் எஸ்டேட் புரோக்கர்களும், ஆற்று மணற் கொள்ளையர்களும் தலைவர்களாக வலம்வருவதன் அடிப்படையை இந்தப் பின்னணியிலிருந்துதான் பார்க்க முடியும்.

இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் காலனி ஆட்சியாளர்கள் பொது மராமத்து பணிகளைச் செய்வதைக் கைவிட்டதன் மூலம், இருந்ததையும் இழந்து எதையும் பெற முடியாத நிலைக்கு இந்தியாவைத் தள்ளியதாகக் குறிப்பிடுவார், பேராசான் காரல் மார்க்ஸ். காலனி ஆட்சியில் தொடங்கிய இந்த அழிவை தற்பொழுது நடக்கும் மறுகாலனிய ஆதிக்கம் முடித்து வைக்க தீவிரமாக முனைகிறது.

## மக்கள் அதிகாரமே மாற்று!

தமிழகத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதைத் தடுக்கவும், மழை நீரைச் சேமித்து வைக்கவும் இருக்கின்ற ஏரிகள், குளங்களையாவது பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கை இப்பொழுது வலுப்படத் தொடங்கியிருக்கிறது. எனினும், இந்தக் கோரிக்கையை முன்வைக்கும் பலரும் விவசாய நசிவைப் பற்றிப் பேசுவது கிடையாது. ஏரிகளைப் பாதுகாக்க கோரும் பெரும்பாலோர் சுற்றுப்புறச் சூழல் அரசியல் கண்ணோட்டத்திலிருந்து அல்லது பாதிப்பால் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து மட்டுமே இக்கோரிக்கையை முன்வைக்கின்றனர். ஏரிகளின், தமிழக ஆறுகளின் பேரழிவுக்குக் காரணமான தனியார்மய வளர்ச்சிப் பாதையை நிராகரிக்காமல், நீர்நிலைகளைப் பாதுகாத்துவிட முடியும் எனக் கருதுவது கனவுகளில்கூட சாத்தியமாகாது.



மணப்பாக்கம் ஏரிக்குள் கட்டப்பட்ட மியாட் மருத்துவமனையில் இறந்துபோனவர்களின் சடலங்கள்.

மேலும், முக்கிய நீர்நிலைகளில் காணப்படும் ஆக்கிரமிப்புகள் குறித்து ஒரு பொது விசாரணை நடத்தி, அத்தகைய ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்ட ரியல் எஸ்டேட் நிறுவனங்கள், அரசியல் புரோக்கர்கள் உள்ளிட்ட கும்பல் அடையாளம் காணப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் எனவும் கோர வேண்டும். கூவம், அடையாறை ஆக்கிரமித்திருக்கும் ஏழைகளின் குடிசைகளை அகற்றுவது நியாயம் எனும்பொழுது, ஏரிகளை ஆக்கிரமித்து எழுந்துள்ள நவீன கட்டுமானங்களையும் அகற்றக் கோருவது எவ்விதத்திலும் அநீதியாகிவிடாது. பாதிக்கப்பட்ட உழைக்கும் மக்கள் அனைவருக்கும் உரிய, நியாயமான நிவாரணமும் இழப்பீடும் கேட்பதற்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்த கடமைகள் இவை.

இவற்றுக்கு அப்பால், அரசு இயந்திரமும், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி அனைத்து ஓட்டுக்கட்சிகளும் தனியார்மயத்தின் அடியாளாக இருப்பதோடு, அவர்களே சொல்லிக்கொள்ளும் கடமைகளை ஆற்ற மறுக்கின்ற எதிர்நிலை சக்திகளாக வளர்ந்து நிற்பதைக் காண்கிறோம். செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்துவிடும் முன் முன்னெச்சரிக்கை செய்ய வேண்டும் என்ற சொரணைகூட இல்லாத அளவிற்கு ஆளுங்கட்சியும், அதிகார வர்க்கமும் மக்கள் விரோதிகளாகச் சீரழிந்து நிற்கின்றனர். சாதாரண நிவாரண நடவடிக்கைகளைக்கூடத் திட்டமிட்டு செய்ய இயலாத திறன் அற்றதாக அதிகார வர்க்கம் இருப்பது அம்பலமாகியிருக்கிறது. நீர்நிலைகளை, மக்களின் உயிரை, உடைமைகளைப் பாதுகாக்க மறுக்கும் அரசிற்கு நம்மை ஆளுவதற்கு அருகதையே கிடையாது என்பதை இந்த அழிவின் வாயிலாக நாம் உணர்ந்தே ஆக வேண்டும்.

ஒருபுறம் மக்கள் விரோத தனியார்மயப் பொருளாதார வளர்ச்சிப் பாதை, இன்னொருபுறம் ஆள அருகதையற்றுப் போன அரசு இயந்திரம் என்ற இரண்டு நுகத்தடிகளை நாம் சுமந்துகொண்டு நிற்கிறோம். இவற்றை நிராகரித்து, விவசாயத்தை, சிறுதொழில்களைப் பாதுகாக்கின்ற மக்கள் நலன் சார்ந்த பொருளாதார வளர்ச்சிப் பாதை; நீர்நிலைகள், ஆற்று மணல் உள்ளிட்ட அனைத்து இயற்கை வளங்களையும் பேணும், பாதுகாக்கும் அதிகாரம் கொண்ட மக்கள் அமைப்புகள் என்ற மாற்று சமூக-பொருளாதார கட்டமைவை உருவாக்கப் போராட வேண்டும் என்பதுதான் இந்த வெள்ளம் நமக்கு உணர்த்திவிட்டுச் சென்ற செய்தியாகும்.

● செல்வம்

## “மூடு டாஸ்மாக்கை!”

# கூட்டு நடவடிக்கை குறித்த கேள்விகளுக்கு விளக்கம்

**தோழர் கோவன் மற்றும் மக்கள் அதிகாரம் தோழர்கள் டாஸ்மாக்கை மூடும் போராட்டத்தை ஆதரிக்கக் கோரி கட்சி தலைவர்களைச் சந்தித்தது தொடர்பாக எழுந்த விமரிசனங்களுக்கு ம.க.இ.க. பொதுச்செயலர் தோழர் மருதையன் வினவு இணையதளம் வாயிலாக அளித்த பதில் சுருக்கித் தரப்படுகிறது.**

‘‘மூடு டாஸ்மாக்கை!’’ என்ற முழக்கத்தில் உடன்பாடுள்ள கட்சிகள் அவர்களது தேர்தல் அரசியல் நலனுக்கு அப்பாற்பட்டு இந்தக் கோரிக்கைக்காகப் போராட வேண்டும் என்று மக்கள் அதிகாரம் வேண்டுகோள் விடுத்திருந்தது. தோழர் கோவன் பிணையில் வெளிவந்தவுடன் அவரது கைதுக்கு எதிராகக் குரல் கொடுத்த கட்சியினருக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகவும், மக்கள் அதிகாரம் சார்பில் நடத்த உத்தேசித்திருந்த டாஸ்மாக்கை மூடக் கோரும் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பதற்கு அழைக்கும் முகமாகவும் மக்கள் நலக் கூட்டியக்கம், தி.மு.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சித் தலைவர்களை மக்கள் அதிகாரத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜுவும், தோழர் கோவனும் சந்தித்தனர்.

தேர்தல் புறக்கணிப்பு அரசியலை இத்தனை காலமாக மேற்கொண்டு வருகின்ற நீங்கள், ஓட்டுக் கட்சிகள் என்று உங்களால் அழைக்கப்படும் கட்சிகளுக்கு நன்றி தெரிவிப்பதும், அவர்களைக் கூட்டு நடவடிக்கைக்கு அழைப்பதும் கொள்கை பிறழ்ந்த செயல் ஆகாதா என சமூக வலைத்தளங்களில் சிலர் கேள்வி எழுப்பியிருக்கின்றனர். இந்த நடவடிக்கை தேர்தல் புறக்கணிப்பு அரசியல் மற்றும் மக்கள் அதிகாரம் அரசியலுக்கு எந்த வகையிலும் முரணானது அல்ல என்ற போதிலும், இது தொடர்பாக சுருக்கமாக விளக்குவது அவசியமாக இருக்கிறது.

•••

‘‘மூடு டாஸ்மாக்கை!’’ என்ற முழக்கத்தை முன்வைத்து மக்கள் அதிகாரம் இயக்கம் மேற்கொண்டு வந்தது. இந்த கோரிக்கைக்காகத் தொடர்ந்து போராடி வந்த சசி பெருமாளின் மரணம், டாஸ்மாக் எதிர்ப்பு போராட்டங்களைத் தீவிரப்படுத்தியது. சசிபெருமாளின் மரணத்தை ஒட்டி எல்லா கட்சித் தலைவர்களும் அவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள். மூட வேண்டும் என்ற கோரிக்கையை எல்லோரும் ஆதரித்தார்கள். ஆனால், ஒன்றுபட்ட நடவடிக்கை இல்லை.

டாஸ்மாக்கை மூடும் அறிவிப்பு ஆகஸ்ட் 15-ஆம் தேதி வரக்கூடும் என்றெல்லாம் பத்திரிகைகள் ஊகம் வெளியிடும் அளவுக்கு மக்கள் மத்தியில் இப்பிரச்சினை தீவிரமாக இருந்தது. பிறகு அ.தி.மு.க. அரசு திட்டமிட்டே அந்தப் பிரச்சனையைத் திசைதிருப்புவதற்காக ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் விவகாரத்தை கிளப்பியது. பிறகு டாஸ்மாக் பிரச்சனை ஓய்ந்து விட்டது.

இப்போது கோவன் கைதை எல்லா கட்சிகளும் கண்டிக்கின்றனர். டாஸ்மாக் மீண்டும் விவாதப் பொருளாகிறது. ஆனால், கண்டிக்கின்ற கட்சிகள் டாஸ்மாக்கை மூடும் கோரிக்கைக்கு ஒன்றுபடவில்லை. கோவனுடைய கைதைக் கண்டிப்பதில் கருத்தொற்றுமை கொண்ட கட்சிகள், டாஸ்மாக்கை மூட வேண்டும் என்ற கோரிக்கைக்காக தேர்தல் அரசியல் நலனுக்கு அப்பாற்பட்டு ஏன் போராடக்கூடாது என்று கேட்கவும், அது தொடர்பான பொதுக்கூட்டத்தில் பங்கேற்குமாறு அழைக்கவுமே இக்கட்சித் தலைவர்களைத் தோழர்கள் சந்தித்தார்கள்.

•••

தி.மு.க. தலைவர் மு.கருணாநிதியைச் சந்தித்த மக்கள் அதிகாரம் அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு, ம.க.இ.க. மையக் கலைக்குழுவைச் சேர்ந்த தோழர் கோவன் உள்ளிட்டோர்.



இப்படி ஒரு கூட்டு நடவடிக்கை தேவையா, இல்லையா என்ற கேள்விக்கு நாம் விடை காண வேண்டுமானால், டாஸ்மாக் பிரச்சினையின் முக்கியத்துவத்தை மதிப்பிடுவதில் ஒத்த கருத்து இருப்பது அவசியம். தமிழக மக்களை அச்சுறுத்தும் பல பிரச்சினைகளில் டாஸ்மாக்கும் ஒன்று என்ற கண்ணோட்டத்தில் இந்தப் பிரச்சினையைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. சாதி, மதவெறி முதல் இயற்கை வளங்கள் கொள்ளை போவது வரை பல்வேறு விதமான பிரச்சினைகளைத் தமிழகம் எதிர்கொண்டுள்ளது என்ற போதிலும், மனித வளத்தை அழிக்கின்ற, தமிழ்ச் சமூகத்தை ஒட்டுமொத்தமாகச் சீரழிக்கின்ற, தமிழ் மக்களையும் இளைஞர்களையும் எதற்கும் ஆகாத பதர்களாக மாற்றுகின்ற பிரச்சினை டாஸ்மாக் பிரச்சினை. இதனைத் தடுத்து நிறுத்தவில்லையென்றால், எந்தப் பிரச்சினைக்காகவும் யாரும் மக்களைத் திரட்ட இயலாத சூழ்நிலை ஏற்படும். இது அபினி யுத்தத்துக்கு முந்தைய சீனத்துடன் ஒப்பிடத்தக்க நிலைமை. சுனாமியைப் போன்றதொரு பேரழிவு.



மனித உரிமைப் பாதுகாப்பு மையம் ஒருங்கிணைத்து சிதம்பரத்தில் நடத்திய தில்லைக் கோவில் மீட்பு - சாதிய தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் பங்கேற்று சிறப்புரையாற்றும் முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் வீ.வீ.சாமிநாதன்.

கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு நாம் தமிழ் நாட்டின் பொதுக்கோரிக்கை என்ற அடிப்படையிலே காவிரிப் பிரச்சினைக்காக ஒன்று திரள வேண்டும். முல்லைப் பெரியாறுக்காக ஒன்று திரளவேண்டும். தமிழக மீனவர் பிரச்சினைக்காக ஒன்று திரள வேண்டுமென்றெல்லாம் சொல்வார்கள். அவற்றையெல்லாம் விட மிக முக்கியமான பிரச்சினை இது. அப்படி ஒன்று திரள வேண்டுமென்று கோருவதற்குத்தான் போனோம்.

இது பிரச்சாரம் செய்துகொண்டே இருக்கும் பிரச்சினை அல்ல. ''மூடு டாஸ்மாக்கை'' என்பது இலக்கு வைத்து முடிக்கக்கூடிய கோரிக்கை; முடிக்க வேண்டிய கோரிக்கை. அப்படி முடிப்பதற்கு ஒரு அணிசேர்க்கை தேவை என்பது எதார்த்த நிலைமை.

டாஸ்மாக் எதிர்ப்புப் போராட்டம் என்பது ம.க.இ.க. மட்டுமோ, மக்கள் அதிகாரம் மட்டுமோ நடத்திய போராட்டம் அல்ல. அந்தக் குறிப்பிட்ட காலக்கட்டத்தில், டைஃபி., ஜனநாயக மாதர் சங்கம், எஸ்.எப்.ஐ. என பல்வேறு கட்சிகள், இயக்கங்கள், கட்சி சாராத அமைப்புகள் போன்றோர் இதற்காகப் போராடியிருக்கிறார்கள்.

ஆனால், மக்கள் அதிகாரம், ம.க.இ.க. சார்ந்த அமைப்புகளின் மீது மட்டும் கூடுதலாகத் தாக்குதல் தொடுத்தது அரசு. யார் இதற்காக விடாப்பிடியாகவும், இந்த அரசு அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலும் போராட்டம் நடத்துவார்கள் என்று அரசு கருதுகிறதோ அவர்களை ஒடுக்கினால், மற்றவர்களை அச்சுறுத்தி தலையெடுக்க விடாமல் செய்துவிடலாம் என்று கருதுகிறதோ அவர்களை அதிகமாக ஒடுக்குகிறது. அதை எதிர்கொண்டோம்.

ஒருவேளை, டாஸ்மாக் எதிர்ப்புக் கோரிக்கையிலே கருத்து ஒற்றுமை கொண்ட மற்றக் கட்சிகளை அணுகாமல், நாங்கள் மட்டுமே இந்தப் பிரச்சினையை எடுத்துச் செய்வது என்ற நிலை எடுத்தால் என்ன நடக்கும்? எங்களது போராட்டம் ஒடுக்கப்படுவதும் நசுக்கப்படுவதும் எங்களுக்கு மட்டும் ஏற்படும் பாதிப்பு அல்ல. இதைப் பார்த்து நாளைக்கு இதற்கு எதிராகப் போராடக்கூடாது என்ற அச்சம் இந்த சமூகத்தில் விதைக்கப்படும்.

அதனால்தான் கீழிருந்து மக்களைத் திரட்டிப் போராடுகின்ற அதே நேரத்தில், இந்தக் கோரிக்கையில் கருத்தொற்றுமை கொண்ட கட்சிகள் - இயக்கங்களுடனும் மேலிருந்து ஒரு அணிசேர்க்கை அமைத்து இந்த கோரிக்கைக்குப் போராட வேண்டும். அப்போது மட்டும்தான் இந்தக் கோரிக்கையைச் சாத்தியமாக்க முடியும் என்று எல்லா கட்சிகளையும் அணுகுகிறோம்.

•••

''இவர்களையெல்லாம் நம்புகிறீர்களா?'' என்பதுதான் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளை அணுகியது தவறு என்று கருதுபவர்களின் விமர்சனங்களில் பொதிந்திருக்கிற மிக முக்கியமான ஒரு கேள்வி. தி.மு.க. தொடங்கி மற்ற எல்லா கட்சிகளிலும் இந்த டாஸ்மாக் மதுபானக் கடைக்கு சாராயம் சப்ளை செய்பவர்கள், கள்ளச்சாராயம் இருந்த காலத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சியவர்கள் மற்றும் அவர்களுடைய புரவலர்கள் தான் மேல் மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது, அவர்கள் மதுவிலக்கை ஆதரிப்பதாகச் சொல்வதை மக்கள் நம்பி ஏமாந்தால் பரவாயில்லை, நீங்கள் கூடவா நம்புகிறீர்கள் என்று ஒரு கேள்வி எழுப்பப்படுகிறது.

இந்த ‘‘நம்பிக்கை’’ என்ற விசயத்தை பொறுத்தவரைக்கும், நம்பவே முடியாத விவகாரங்கள் சில உண்டு. மதச்சார்பின்மையை அமல்படுத்தப் போவதாக பாரதிய ஜனதா கூறினாலோ, தனியார்மயத்தை ஒழிக்கப்போவதாக மன்மோகன் சிங் சொன்னாலோ அதனை நம்ப முடியாதுதான். ஆனால், மதுவிலக்கு என்ற இந்தக் கோரிக்கையின் வரம்பு குறுகியது.

நம்பிக்கை பற்றிய விசயத்தை பற்றிப் பேசும் போது சமீபத்திய எடுத்துக்காட்டு ஒன்று சொல்ல வேண்டும். பீகார் தேர்தலின் போது ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் ‘‘இடஒதுக்கீடு தொடர்ந்து நீடிக்க முடியாது’’ என்று பேசியது பா.ஜ.க.வின் தோல்விக்குக் காரணமாக அமையும் என்ற அளவுக்கு அவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. மோடி இந்த ஓட்டையை அடைக்க வேண்டியிருந்தது.

‘‘யார் சொன்னாலும் நம்பதீர்கள், நான் சொல்கிறேன், என்னை நம்புங்கள், இட ஒதுக்கீடு நீடிக்கும்’’ என்று மோடி பேசி இருக்கலாம். ஆனால், அப்படிச் சொன்னால் தன்னை மக்கள் நம்ப மாட்டார்கள் என்று மோடிக்குத் தெரிந்திருந்தது. எனவே, ‘‘யார் நினைத்தாலும் இட ஒதுக்கீட்டை நீக்க முடியாது’’ என்று பேசுகிறார். அதாவது, இந்தக் கோரிக்கைக்கு எதிராக யாரும் போக முடியாது என்ற புறவயமான யதார்த்தத்தைச் சொல்லி, ‘என்னை நம்பவில்லை என்றாலும் இந்த புறவயமான உண்மையை நம்புங்கள்‘ என்ற கோணத்தில் பேசுகிறார் மோடி.

**“மூடு டாஸ்மாக்கை” என்பது பிரச்சாரம் செய்துகொண்டே இருக்கும் பிரச்சினை அல்ல; இலக்கு வைத்து முடிக்க வேண்டிய கோரிக்கை. அப்படி முடிப்பதற்கு ஒரு அணிசேர்க்கை தேவை என்பது எதார்த்த நிலைமை.**

அதை மதுவிலக்குப் பிரச்சினையுடன் பொருத்திப் பாருங்கள். இன்றைக்கு மதுவிலக்கு கோருகின்ற கட்சிகள் எல்லாம் முதலில் இருந்தே இந்த கோரிக்கையை வைத்திருக்கிறார்களா? மதுவிலக்குக்காக பலபேர் போராட்டம் நடத்தி, இந்த டாஸ்மாக்கின் சீரழிவு கட்டுக்கடங்காத அளவு அதிகரித்து, மக்களின் வெறுப்பும் கோபமும் அதிகரித்த பிறகுதான் மதுவிலக்கு என்பதை ஒரு கோரிக்கையாக எல்லோரும் எடுத்துக் கொள்கிறார்கள். ‘‘நாங்கள் வந்தால் மூடுவோம்’’ என்கிறார்கள்

‘‘நீங்கதானே கடையை திறந்து விட்டீர்கள்’’ என்று குற்றச்சாட்டுக்கு தி.மு.க. தலைவர் பதில் சொல்கிறார். ‘‘ஆமாம், ஒரு கட்டத்தில் திறந்தோம், இப்போது அது கட்டுக்கடங்காத பேரழிவாக மாறி விட்டது. சமூகத்துக்கே பெரிய ஆபத்தாகி விட்டது. அதனால் நாங்கள் மூடுவது என்று முடிவு பண்ணியிருக்கிறோம்’’ என்கிறார். ‘‘உங்க கட்சிக்காரர்களே வைத்திருக்கிறார்கள். பினாமி பேரில் வைத்திருக்கிறார்கள்’’ என்று குற்றச்சாட்டு வருகிறது. தான் சொன்னால் ஏற்க மாட்டார்கள் என்று அவர்களையே கொண்டு வந்து சொல்ல வைக்கிறார்.

‘‘இவர்கள் சொல்லிவிட்டால் நீங்கள் நம்பி விடுவதா?’’ என்று கேட்கலாம். இவர்களை இவ்வாறு சொல்ல வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கியது எது? இதில் அவர்களுடைய நேர்மை உணர்ச்சி எத்தனை சதவீதம், பொதுக்கருத்தின் நிர்ப்பந்தம் எத்தனை சதவீதம் என்ற ஆராய்ச்சி நமக்குத் தேவையில்லை. நமக்குத் தேவை - பயன். ஏன் இப்படி ஒரு உத்தரவாதத்தை அவர்கள் தர வேண்டும்? மக்களுடைய பொதுக்கருத்து மற்றும் போராட்டத்தின் வலிமைதான் இதற்குக் காரணம்.

‘‘இதுதான் உங்கள் கோரிக்கை என்றால், பிரச்சாரம், கூட்டங்களில் வந்து பேச வாருங்கள். மக்களுக்கு அந்த உத்தரவாதம் கொடுங்கள். இதற்காகப் போராட்டம் நடத்துகிறோம், கலந்து கொள்ளுங்கள். அதில் உங்கள் அணிகளை, தொண்டர்களை ஈடுபடுத்துங்கள்’’ என்று அக்கட்சிகள் அனைவரிடமும் கோருகிறோம். இப்படிச் செய்வதன் மூலம் அவர்களை மக்களுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்களாக்குகிறோம். இப்படிச் செய்வதன் மூலம்

‘‘மூடு டாஸ்மாக்கை!’’ கோரிக்கையை முன்வைத்து மக்கள் அதிகாரம் ஒருங்கிணைத்து திருப்பெரும்புதூரில் ஆகஸ்டு-31 அன்று நடத்திய பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தனிச் செயலர் இளஞ்சேகுவேரா.



இந்தக் கோரிக்கை நிறைவேறுவதை கீழிருந்து உத்திர வாதப்படுத்துகிறோம். ஒருவேளை வாக்கு தவறி னால்? நீங்கள், நாங்கள் கேட்போம் என்பதும் அப்படி ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவதும்தான் இதில் உத்திர வாதம்.

நம்பிக்கை என்ற கோணத்திலிருந்து இந்தப் பிரச் சினையை பார்ப்பவர்கள் மற்ற விசயங்களுக்கும் அதனைப் பொருத்திப் பார்க்க வேண்டும். சட்டத்தின் ஆட்சி நடப்பதை நம்புவதாகக் கூறுபவர்கள் கூட உண் மையில் அப்படி நம்புகிறார்களா? கருத்துரிமையோ, தீண்டாமை ஒழிப்பு சட்டமோ எதுவானாலும் சட்டம் அளிக்கும் உரிமையைப் போராடித்தான் நிலைநாட்டிக் கொள்ளப்படுகிறது. நீதிமன்றத்தை நம்பினால் காரியம் நடக்குமா என்பதற்கு சசி பெருமாள் சமீபத்திய உதாரணம்.

உத்திரவாதம் என்பது, எங்கே கோரிக்கை நிறைவேறாவிடில் மக்கள் விட மாட்டார்களோ அங்கு மட்டும்தான் இருக்கிறது. விடாப்படியாகப் போராடு வதற்கு எங்கே மக்கள் அணியமாக இருக் கிறார்களோ, அங்கேதான் ஆற்று மணல் கொள்ளையை நிறுத்த முடியும்; அங்கே தான் டாஸ்மாக் கடையை மூட முடி கிறது. ஒருவேளை மதுவிலக்கு கொண்டு வந்தாலும் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்கு என்ன உத்திரவாதம்? போலீஸ் இருக்கும் வரையில் கள்ளச் சாராயம் இருக்கும். மக்கள் அதிகாரம் செல்லுபடியாகும் இடங்களில்தான் கள்ளச் சாராயத்தைத் தடுக்க முடியும் என்பதே உண்மை.

அதனால்தான் ‘‘மீட்பர்கள் யாரும் இல்லை’’ என்று சொல்கிறோம். ஆகவே, இவர்களை எல்லாம் சென்று சந்திப்பதும், மதுவிலக்கு போராட்டத்துக்கு வாருங் கள் என்று அழைப்பதும், அவர்கள் மீது வைக்கும் நம்பிக்கை என்பதை காட்டிலும் மக்கள் மீது வைக்கும் நம்பிக்கை என்று சொல்வதுதான் பொருத்தமானது.

வேறொரு கோணத்திலிருந்தும் இதனைப் புரிந்து கொள்ளலாம். டாஸ்மாக்கை மூடுவது என்ற ஒரு கோரிக்கையின் மீதான கூட்டு நடவடிக்கைக்காகத் தான் தேர்தல் அரசியல் கட்சிகளை அணுகியிருக் கிறோம். மற்றபடி அவர்கள் வந்தால் டாஸ்மாக்கை மூடுவார்கள், அவர்களுக்கு ஓட்டு போடுங்கள் என்று யார் ஒருவருக்காகவும் ஓட்டு கேட்கப்போவதில்லை. நாங்கள் தேர்தல் புறக்கணிப்பைத்தான் பேசப் போகிறோம் என்பது ஆர்ப்பாட்டத்தில் இதுவரை கலந்து கொண்ட கட்சிகள் அனைவருக்கும் தெரியும்.

இது போலி ஜனநாயகம் என்பது மட்டுமல்ல, சொல்லிக்கொள்கிற ஜனநாயகம்; ஜனநாயகம் என்கிற அமைப்பில் உள்ள நிறுவனங்கள், அவர்களே சொல்கிற சட்டங்கள், மரபுகள், விதிமுறைகள், நெறி கள் இவை எதையும் கடைப்பிடிக்காமல் தோற்று விட்டன, திவாலாகி விட்டன, காலாவதியாகி விட்டன என்பதைத்தான் வலியுறுத்துகிறோம். ‘‘ஜன நாயகம்’’ என்ற இந்த போலி ஜனநாயகம் அதன் வாழ் நாளின் கடைசி கட்டத்தில் நிற்கிறது. இற்று வீழ்ந்து விட்டது. இங்கே மக்கள் அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டும் என்பதுதான் மக்கள் அதிகாரம் அமைப் பினுடைய நோக்கம்.

டாஸ்மாக்கை மூடுவது கூட கீழிருந்து மக்கள் அதி காரத்தின் துணை கொண்டு, வலிமை கொண்டு செய்யப்பட வேண்டும் என்றுதான் மக்கள் அதிகாரம் கூறுகிறது. அதற்குத் துணையாகத்தான் இந்தத் தேர்தல் கட்சிகள் இங்கே அழைக்கப்படுகிறார்களே அன்றி, அதற்கு மாற்றாக அல்ல. மக்கள் அதிகாரத்துக்கு அவர் களை உட்படுத்துவது என்பதுதான் இந்த கூட்டு நட வடிக்கையில் மக்கள் அதிகாரம் மேற்கொள்ளும் முயற்சி.



தோழர் கோவன் பிணையில் விடுதலையானதையொட்டி, வி.சி., புதிய தமிழகம், சி.பி.ஐ., சி.பி.எம்., தி.க., ஆதித்தமிழர் பேரவை உள்ளிட்டுப் பல்வேறு கட்சிகளும், ஜனநாயக அமைப்புகளும் பங்கேற்று திருச்சியில் நடத்திய அரங்குக் கூட்டம்.

•••

**வி**மரிசிப்பவர்களில் சிலர், கட்சிக்காரர்களைப் பார்த்ததெல்லாம் சரிதான். ஆனால், தங்கள் மீது அடக்குமுறை வந்ததனால்தான் ஆதரவு தேடி அலை கிறார்கள். மற்றபடி பிரச்சினைகளுக்கான கூட்டு நடவடிக்கைகளில் இவர்கள் எந்தக் காலத்திலும் ஈடு பட்டதில்லை என்கிறார்கள்.

இப்படி சொல்வது, ஒரு வகையில் கொச்சைப் படுத்துவது. முதன்மையாக, உண்மைக்கு மாறானது.

பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் மீதான தாக்கு தலுக்கும், கோவன் கைது தொடர்பான கண்டனமும் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகளும் ஊடகங்களும் தாமே முன்வந்து தெரிவித்த கண்டனங்கள் என்பதே உண்மை.

இந்தக் கண்டனங்கள் எதுவும் ம.க.இ.க. தேடி வர வழைத்த கண்டனங்கள் அல்ல. ம.க.இ.க. வுக்கு வழங்

கப்பட்ட சலுகையும் அல்ல. அப்படிச் சொல்வது ஜனநாயக உணர்வோடு கண்டனம் தெரிவித்தவர்களை இழிவு படுத்துவதாகும்.

மேலும், அடக்குமுறையிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்குத்தான் ம.க.இ.க. வினர் கட்சித் தலைவர்களைச் சென்று சந்தித்தார்கள் என்று கூறுவது, அவ்வாறு கூறுபவர்களின் கீழ்மையைக் காட்டுகிறதேயன்றி, உண்மையைச் சுட்டவில்லை. கோவன் ராஜத்துரோகக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பது, ம.க.இ.க. இதுவரை சந்தித்திராத அடக்குமுறை அல்ல.

1991-96 ஜெ. ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ நூற்றுக்கும் மேற்பட்ட ராஜத்துரோக வழக்குகள் பல தோழர்கள் மீது போடப்பட்டிருக்கின்றன. 87-90 வரையிலான காலகட்டத்தில் பல பொய்யான வெடிகுண்டு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. தேசிய பாதுகாப்பு சட்டம் மற்றும் ‘‘தடா’’ வில் பல தோழர்கள் சிறையில் இருந்திருக்கிறார்கள். இந்தக் காலகட்டங்களிலெல்லாம் விடுதலைக்காக நாங்கள் யாருடைய ஆதரவையும் கோரிப் பெற்றதில்லை. ஒருவேளை அவ்வாறு கோரியிருந்தால் அதில் தவறில்லை என்பது வேறு விசயம்.

**டாஸ்மாக்கை மூடுவது கூட கீழிருந்து மக்கள் அதிகாரத்தின் துணை கொண்டு, வலிமை கொண்டு செய்யப்பட வேண்டும் என்றுதான் மக்கள் அதிகாரம் கூறுகிறது. அதற்குத் துணையாகத்தான் இந்தத் தேர்தல் கட்சிகள் இங்கே அழைக்கப்படுகிறார்களே அன்றி, அதற்கு மாற்றாக அல்ல.**

பார்ப்பன பாசிசம் மூர்க்கமாகத் தலையெடுத்த இந்த காலகட்டத்தில் கருவறை நுழைவுப் போராட்டம் தொடங்கி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகப் பல போராட்டங்களை ம.க.இ.க. வும் தோழமை அமைப்புகளும் நடத்தியிருக்கின்றன. இவற்றில் தலித் அமைப்புகள் உள்ளிட்டோர் கூட்டு நடவடிக்கையாக எங்களோடு கலந்துகொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் இசை விழாவை விட கூட்டு நடவடிக்கைக்கு ஒரு பெரிய எடுத்துக்காட்டு தேவையில்லை. தில்லையில் தமிழ் பாடும் உரிமைக்கான போராட்டத்தில் பலர் பங்கேற்றிருக்கிறார்கள்.

இப்போதும், மூடு டாஸ்மாக்கை என்ற முழக்கத்தின் கீழ் ஆகஸ்டு-31 அன்று எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், மக்கள் நலக் கூட்டியக்கம், தே.மு.தி.க., தி.மு.க. ஆகிய எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த மாவட்ட அளவிலான பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். அதைத் தொடர்ந்து கோவன் கைதைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களிலும் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், யாரோடு கூட்டு நடவடிக்கைக்குப் போகலாம் என்பதில் விமர்சனம் செய்பவர்களுக்கும் எங்களுடன் கருத்து வேறுபாடு இருக்கிறது. தேர்தல் அரசியல் கட்சிகளோடு கூட்டு நடவடிக்கைக்குப் போகக் கூடாது என்பது எங்களது நிலைப்பாடு அல்ல. அவ்வாறு கூறுவது உண்மைக்கு மாறானது. தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பெயர்ப்பலகை அமைப்புகள், பா.ம.க., கொங்கு கட்சி, பா.ஜ.க. போன்ற சாதி-மதவெறிக் கட்சிகள், தவ்கீத் ஜமாத் போன்ற மதவாதக் கட்சிகளோடு கூட்டு நடவடிக்கைக்குப் போவதில்லை என்பதுதான் ம.க.இ.க. சார்ந்த அமைப்புகளின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டில் உடன்பாடு இல்லாதவர்கள்தான், யாரோடும் கூட்டு நடவடிக்கைக்குப் போகாதவர்கள் என்று ம.க.இ.க. வை அவதூறு செய்கிறார்கள்.

யாரோடும் கூட்டு நடவடிக்கைக்குப் போகலாம் என்பதும் தவறு. எல்லோரும் நம்பத்தகாதவர்கள் என்று அனைவரையும் புறக்கணிப்பதும் தவறு. கட்சிகளுக்கு இடையிலான வேறுபாட்டை அங்கீகரிக்காமல், யாரையும் நம்பக்கூடாது என்று பேசுவதும் ஒரு வகையான அரசியலற்ற ஒழுக்கவாதம். நம்பத்தகாதவர்கள் என்று கூறப்படும் கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள்தான் டாஸ்மாக் முதல் ஆற்றுமணல் கொள்ளை வரையிலனா பிரச்சினைகளுக்குப் போராடவும் சிறை செல்லவும் முன்வருகிறார்கள். யார் தம்மை செயலில் ஈடுபடுத்திக் கொள்கிறார்களோ, அவர்கள்தான் சமூக மாற்றத்தைச் சாதிப்பார்கள். தங்களையும் மாற்றிக் கொள்வார்கள்.

டாஸ்மாக்கை மூடவேண்டும் என்று கூறுபவர்கள் அரசியல் கட்சியாக இருக்கட்டும், சமூக இயக்கங்களாக இருக்கட்டும். அவர்கள் எத்தனை பலவீனமானவர்களாக இருந்தாலும், எத்தனை உறுதியற்றவர்களாக இருந்தாலும் அவர்களோடு ஒரு கூட்டு நடவடிக்கைக்குப் போக வேண்டும். டாஸ்மாக்கை மூடுவது என்ற இந்த இலக்கை எப்பாடுபட்டேனும் அடைய வேண்டுமென்பதற்காகத்தான் எல்லோரையும் அணுகியிருக்கிறோம்.

எல்லாக் கட்சிகளும் டாஸ்மாக்கை மூடுமாறு கோரிய போதிலும், தமிழக மக்கள் அனைவரின் பொதுக் கருத்தும் இதைத் தீவிரமாக வலியுறுத்திய போதிலும், அ.தி.மு.க. என்ற ஒரேயொரு கட்சியும் அதன் அரசும் உங்களால் முடிந்ததைப் பாருங்கள் என்று தமிழ் மக்கள் அனைவருக்கும் சவால் விடுகிறது. இந்தப் பாசிசத் திமிரை முறியடிக்காமல், தன்னந்தனியே போராடி நசுக்கப்படுவதா அல்லது எதிர்ப்போர் அனைவரையும் ஒன்றுதிரட்டி இந்த அரசுக்கு எதிராக நிறுத்தி போராட்டத்தை தீவிரப்படுத்துவதா என்பதுதான் நம்முன் உள்ள கேள்வி. ●

# பணமா, பார்ப்பன பாசமா?

தோழர் கோவனைப் போலீசு காவலில் எடுத்து விசாரிக்க வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் ஜெ. அரசு செய்த மேல் முறையீடு, விசாரணைக்கு ஏற்பதற்கே தகுதியற்றது என்று கூறி நிராகரித்து விட்டது உச்ச நீதிமன்றம். இந்த வழக்கில் தமிழக அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் யார் தெரியுமா? மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் முகுல் ரோகத்கி. இதெல்லாம் ஒரு வழக்கு, இதற்கு வாதாட மத்திய அரசின் தலைமை வழக்கறிஞரா என்றவாறு நீதிபதிகள் கேள்வி எழுப்பும் அளவுக்கு ஜெ. அரசின் யோக்கியதை சந்தி சிரித்து விட்டது.

கோவன் வழக்கு தொடர்பாக ஜெ. அரசு உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றது உச்ச கட்ட கேலிக்கூத்து என்றால், இந்தப் பொய் வழக்கை நியாயப்படுத்த ஜெ.அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் துவக்கம் முதலே முட்டாள் தனமானவையாகவும் மூர்க்கத்தனமானவையாகவுமே இருந்தன.

நீதிமன்றக் காவலில் சிறை வைக்கப்பட்ட கோவனை 5 நாட்கள் தங்கள் காவலில் வைத்து விசாரிக்க வேண்டுமென மனு தாக்கல் செய்தது சைபர் கிரைம் போலீசு. காவலில் வைத்து விசாரிப்பதற்கான முகாந்திரம் என்ன என்று வழக்கறிஞர் சங்கர் சுப்பு எழுப்பிய எந்தக் கேள்விக்கும் பதிலளிக்க முடியாமல் விசாரணை அதிகாரி திணறினார். இருப்பினும் 2 நாட்கள் போலீசு காவலை அனுமதித்து நவ. 13 அன்று உத்தரவிட்டது எழும்பூர் நீதிமன்றம்.

இந்த போலீசு காவல் சட்டவிரோதமானதென்பதால், இதற்குத் தடை விதிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தில் தோழர் கோவன் சார்பில் தாக்கல் செய்த மனு நவ. 14 அன்று விசாரிக்கப்பட்டது. ''கோவனுக்கு நக்சலைட் அமைப்புகளுடன் உள்ள தொடர்பு பற்றி விசாரிக்க வேண்டும் என்று கேட்கிறீர்களே, இதுவரை விசாரித்து அவ்வாறு நீங்கள் கண்டு பிடித்தது என்ன'' என்றும், ''ம.க.இ.க. தடை செய்யப்பட்ட அமைப்பா?'' என்றும் நீதிமன்றம் எழுப்பிய கேள்விக்கு அரசு தலைமை வழக்கறிஞரால் பதிலளிக்க இயலவில்லை. ''இந்த வழக்கு எந்தக் குற்றப்பிரிவின் கீழ் வருமோ அந்த சைபர் கிரைம் குற்றப்பிரிவையே உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்ட நிலையில், போலீசு காவல் தேவையற்றது'' என்று கூறி, அதற்கு இடைக்காலத் தடை விதித்து போலீசு காவலிலிருந்து கோவனை விடுவித்தது உயர் நீதிமன்றம்.

இதற்கிடையில் சென்னை செசன்சு நீதிமன்றத்தில், ''கோவனை பிணையில் விடுவிக்கக் கூடாது'' என்று ஆட்சேபித்த அரசு வழக்கறிஞர், ''அம்மாவைத் தரக் குறைவாக விமரிசித்து பாடல் எழுதி இருப்பதால் பிணையில் விடக்கூடாது'' என்று வாதிட்டார். தேசத் துரோக குற்றத்துக்கு வழக்கு போட்டுவிட்டு, சம்பந்தமே இல்லாமல் வேறொன்றைப் பேசுவது அபத்தமானது என்று நேரடியாக அரசு வழக்கறிஞரை இடித்துரைக்காமல்,கோவனுக்கு பிணை வழங்கி உத்தரவிட்டது செசன்சு நீதிமன்றம்.

போலீசு காவலும் இல்லை, நீதிமன்றக் காவலும் இல்லை என்று ஆகிவிட்டதால், ஆத்திரம் தலைக்கேறிய நிலையில்தான் உச்ச நீதிமன்றம் சென்றது ஜெ.அரசு. பிணையில் விடுவிக்கப்பட்ட ஒரு நபரை, நீதிமன்றக் காவலில் வைக்காமல் அவரை போலீசு காவலில் எடுக்க முடியாது என்பது ஒரு கற்றுக்குட்டி வழக்கறிஞருக்குக் கூட தெரிந்த விசயம். மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் இது கூடத் தெரியாத முட்டாளா என்று நீங்கள் எண்ணலாம்.

பணத்துக்கு ஆசைப்பட்டு மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் மானமிழந்திருக்கக் கூடும். பணத்துடன் பார்ப்பனப் பாசமும் ஒரு பங்காற்றியிருக்கும். இந்தப் பாடலின் பின்புலத்தில் பாகிஸ்தான், அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சதி இருப்பதாகவும் அவை விசாரிக்கப்பட வேண்டும் என்றும் தமிழகத்தின் பா.ஜ.க. பிரமுகர்கள் பேசியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள். எனவே, இது ஜெ.கும்பலின் வழமையான முட்டாள்தனமோ மூர்க்கத்தனமோ மட்டும் அல்ல; இதில் பார்ப்பன பாசிஸ்டுகளுக்கு இடையிலான பாசம் ஆற்றியிருக்கும் பங்கை நாம் மறந்துவிடலாகாது.

• அஜித்

சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்து பிணையில் வெளிவந்ததையடுத்து, தனக்கு அளிக்கப்பட்ட ஆதரவிற்கும், வரவேற்பிற்கும் நன்றி தெரிவிக்கும் தோழர் கோவன்.



புதிய கல்விக் கொள்கை - 2015

# பல்கலைக்கழகங்கள் இறக்குமதி! மாணவர்கள் ஏற்றுமதி!!

**புதிய கல்விக் கொள்கை – 2015 கல்வியைப் பண்டமாகவும், மாணவர்களை நுகர்வோனாகவும் மாற்றுவதோடு, ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பையும் ஒழிக்கிறது.**

''**எ**ண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு'' என்கிறது குறள்.

ஆனால், மோடி அரசு முன் வைக்கும் புதிய கல்விக் கொள்கை-2015 சமூகத்தின் கண்களாக இருக்கும் கல்வியை நோண்டி விற்றுத் தீர்க்கப் பார்க்கிறது.

வரும் டிசம்பர்-15- இல் மோடி அரசு, உலக வர்த்தகக் கழகத்தின் காட்ஸ் ( General Agreement on Trade in Services) ஒப்பந்தத்தில் கையெழுத்திடவிருக்கிறது. ஏற்கனவே, 90-களில் புகுத்தப்பட்ட காட் ஒப்பந்தம் உற்பத்தித் துறையில் தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்று கூவி இந்திய விவசாயத்தையும் தொழில்துறையையும் சின்னாபின்னமாக்கியிருக்கிறது.

இலட்சக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டது; கோடிக்கணக்கான தொழிலாளிகள் உதிரிகளாகிப் போனது; சிறு-குறுந்தொழில்கள் பேரளவில் அழிந்துபோனது; மென்பொருள் பணியாளர்கள் கூட நடுத்தெருவில் நிற்பது என ''காட்''டின் காட்டாட்சி வாரிச்சுருட்டிய பேரழிவு வகை - தொகையற்றது.

தற்பொழுது மோடி அரசு கையெழுத்திடப்போகும் ஒப்பந்தம், சேவைத்துறையைச் சூறையாட அனுமதிக்கப் போகிறது. இதன்படி நாட்டின் அடிப்படை ஆதாரங்களான தண்ணீர், உணவு, கல்வி, கனிமவளம், இயற்கைச் சூழல் போன்றவைகள் நாட்டின் உடைமை மற்றும் உரிமை என்ற நிலையில் இருந்து விற்றுத் தீர்க்கும் நுகர்வுப் பண்டங்களாக அறிவிக்கப்பட உள்ளன. இதன் ஒரு பகுதியாக, புதிய கல்விக் கொள்கை - 2015, இந்தியக் கல்விக் கட்டமைப்பை நிர்மூலமாக்கி, மனிதவளச் சுரண்டலுக்கு உலகளாவிய அளவில் சட்டப்பூர்வ வடிவம் கொடுக்கவிருக்கிறது. கூடவே, மத்தியில் வீற்றிருக்கும் இந்துத்துவ கும்பல், தன் பங்கிற்கு புதிய கல்விக்கொள்கையில் கலாச்சார பாசிசத்தையும், பார்ப்பனிய மேலாண்மையையும் புகுத்த எத்தனித்திருக்கிறது.

குறிப்பாக, இடைநிலை பள்ளிக் கல்வியில் (Secondary School Education) இருந்தே தொழிற்கல்வி புகுத்தப்பட வேண்டுமென அறிவிக்கிறது புதியக் கல்விக் கொள்கை. இதுவரை நம் நாட்டில் பின்தங்கிய பொருளாதார மற்றும் பார்ப்பனியத்தின் கொடூர சாதிய அடக்குமுறை பின்புலத்தில் இருந்து வரும் மாணவர்களுக்கு பள்ளிக்கல்வி பொதுக்கல்வியாக வழங்கப்படும் வாய்ப்பு இருந்து வருகிறது. இத்தகைய வாய்ப்பு நீண்ட நெடுங்காலமாக பார்ப்பனியத்திற்கு எதிராக இடையறாது போராடிப் பெற்ற உரிமையாகும். ஆனால், புதிய கல்விக் கொள்கையோ மாணவர்களின் வறுமையைச் சுரண்டி, எட்டாம் வகுப்பிலேயே தொழிற்கல்வி என்ற பெயரில் குலக்கல்வியைப் புகுத்துவதன் மூலம் உழைப்புச்சந்தைக்கேற்ற கூலிகளை ஒருபக்கம் உறுதிப்படுத்திக்கொண்டே, மறுபக்கம் பார்ப்பனியத்தின் வருணாசிரம தர்மத்தில் மக்களை மேலும் சிக்க வைக்கிறது. இந்த வகையில் இது ஏகாதிபத்தியத்தின் மனிதவளச் சுரண்டலுக்கு உவப்பானதாக இருக்கிறது.

சான்றாக, மேக் - இன் இந்தியா திட்டத்தின் கீழ் பன்னாட்டு கம்பெனிகளுக்குத் தாராளமாக கூலிகளை அமர்த்தும் வேலையைப் பள்ளியில் அறிமுகப்படுத்தப்படும் தொழிற்கல்வி செய்து கொடுக்கும். இதை முன்னிட்டே, குழந்தைகள் தங்கள் பாரம்பரியத் தொழிலைச் செய்ய அனுமதிக்கும் பொருட்டு குழந்தைத் தொழிலாளர் சட்டம் திருத்தப்படும் மசோதாவை இங்கு நாம் அவசியம் பொருத்திப்பார்க்க வேண்டும்.

தொழிற்கல்வி திட்டமென்று நாட்டின் அடிப்படைக் கட்டமைப்பான பள்ளிக் கல்வியையே நிர்மூலமாக்கிவிட்டால் இந்திய உயர் கல்வியின் நிலை என்னவாக இருக்க முடியும்? புதிய கல்விக் கொள்கை, உயர் கல்வி குறித்து முன் வைக்கும் 33 வகையான கருத்துகள் பேரழிவுக்கு கட்டியம் கூறுபவை.

கல்வியைப் பண்டமாகவும் மாணவர்களை நுகர்வோராகவும் கருதுகிற புதிய கல்விக் கொள்கை, கல்விக் கட்டமைப்பின் அங்கத்தினராக கார்ப்பரேட்டுகளையும், பன்னாட்டு கம்பெனிகளையும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களையும் தனியார் முத

லாளிகளையும் வரையறுக்கிறது. கல்வியை 'வினி யோகம்' செய்கிற செயல் எந்திரமாக கார்ப்பரேட்டு களின் சேவையையும் (Corporate social responsibility) தனியார்-பொது பங்களிப்பையும் (Public & Private Partnership) முன்வைக்கிறது.

இதன்படி, இனி நாட்டில் உள்ள அனைத்து கல்லூரி களும் பல்கலைக்கழகங்களிலிருந்து துண்டிக்கப் பட்டு, நிதி தன்னாட்சி (Financial autonomous) நிறு வனங்களாக அறிவிக்கப்படும். பல்கலைக்கழக மானியக் குழு கலைக்கப்படும். நிதி தன்னாட்சியானது கல்லூரிகளே மாணவர்களிடமிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் வசூலித்துக்கொள்ள வழிவகை செய்கிறது. மேலும், கல்வியை விநியோகம் செய் வதில் தடை ஏதும் வராமல் இருக்க! மாநிலங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் கற்பித்தல் மற்றும் பாடத்திட்டங்களைக் கைப்பற்றி மையப்படுத்து கிறது.

கல்விக்குள் வாணிப சுதந்திரத்தை உறுதி செய்ய பாடத்திட்டம் அனைத்தும், CBCS (Choice based Credit System) ஆக மாற்றம் செய்யப்படுகிறது. இதன் படி கல்விச் சந்தைக் குள் நுழைகிற நுகர்வோர், பரிந்துரைக்கப்பட்ட பாடங்களைத் தாங்களே தேர்ந்தெடுப்பது என் பது தங்கள் கையிருப்பிற்கேற்ப நுகர முடியும் என்பதாக அமையவிருக்கிறது. இதற்காகவே புதிய கல்விக் கொள்கை, கல்வியை நுகரும் நுகர் வோர் கல்வி நிறுவனங்களுக்குள் எந்த ஆண்டி லிருந்தும் நுழையவோ நிறுத்திக் கொள்ளவோ முடியும் என்கிறது. இந்த வகையில் CBCS பாடத்திட்டம் கல்வியை அளக்கின்ற நிறுத்தல், முகத்தல், அளத்தல் அளவையாக இருக்கும்!

சூப்பர் மார்கெட்டில் வாடிக்கையாளர் என்ன பொருள் வாங்குகிறார் என்பதை ஆராய்ச்சி செய்கிற பொழுது, ஒரு கம்பெனி தன் வியாபாரத்தின் மீதான இலாபத்தைத் திருப்பிக்கொள்ள முடியும். இதைத்தான் பிக் டேட்டா - Big Data என்கிறார்கள். இன்றைக்கு Big Data என்பது வென்ச்சர் மூலதன (Venture Capital) நிறு வனங்களின் ஆதாரமாக இருக்கிறது. இந்தியக் கல்வி சந்தையில் பிக்டேட்டா - Big Dataவிற்கான வாய்ப்பு களை ஏகாதிபத்தியங்கள் தங்கள் பக்கம் திருப்பிக் கொள்ளும்படி, புதிய கல்விக் கொள்கையானது மாண வர்-ஆசிரியர்-கல்வி நிறுவனம் என்ற கட்டமைப்பைத் தகர்த்து, அதற்குப் பதிலாக ''மூக்ஸ்'' (Massive Online Open Course) எனப்படும் மாபெரும் திறந்தவெளி இணைய பாடத்திட்டங்களை முன்வைக்கிறது.

அடிப்படைக் கல்வி கட்டமைப்புகளின் மீது பார முகமாக இருக்கிற அரசு (சான்றாக இரண்டு இலட்சத் திற்கும் மேலான அரசுப்பள்ளிகள் மூடப்பட்டிருக் கின்றன), மூக்ஸ் போன்ற இணைய திட்டங்களின் மீது முனைப்புக்காட்டுவது என்பது கல்வியில் தொழில் நுட்பத்தைப் புகுத்தும் அரசின் ஆர்வம் காரணமாக அல்ல. மாறாக, பன்னாட்டு கம்பெனிகளின் இலாப வெறிக்குப் பாதை அமைத்துக் கொடுப்பதும் ஏகாதி பத்தியங்களின் பிடியில் நாட்டு அமைப்புகளை சரணடையச் செய்கிற வேலையேயாகும்.

இதற்காகவே மோடியின் 'டிஜிட்டல் இந்தியா' திட்டம் இருக்கிறது என்பதும், இதை நேரடியாக இயக்குபவர்கள் Ed&Ex, Coursera போன்ற பன்னாட்டு கம்பெனிகள் என்பதும், பிக்கி போன்ற முதலாளித்துவ கூட்டமைப்புகள் மூக்ஸை மூலதனமாகப் பார்ப்பதும், இந்திய கல்வி அமைப்பு எத்தகைய தாக்குதலுக்கு உள்ளாகவிருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட வல்லது.

இதுமட்டுமல்ல, DTH (நேரடி அலை வரிசை) வாயிலாக பெண்களுக்கான கல்வி அவர்கள் வீட்டுக்கே வரும் என்றும் இது பாதுகாப்பானது என்றும் சொல்வதன் மூலம், புதியக் கல்விக் கொள்கை யானது, தொழில்நுட்பத்தின் உதவியோடு பெண்களை




கல்வியை முழுமையாகக் கடைச்சரக்காக மாற்றும் காட்ஸ் ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திடக் கூடாதெனக் கோரி பொதுக் கல்விக்கான மாநில மேடை அமைப்பின் சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம். (கோப்புப் படம்)

ஆயிரம் ஆண்டுகளாக தொடர்ந்து வரும் பார்ப்பனிய- நிலவுடமைச் சமூகத்தின் கோரப்பிடியில் தள்ளுகிறது.

இணைய பாடத் திட்டங்கள் என்கிற பொழுது புதிய கல்விக்கொள்கை ஆசிரியருக்கான பணிப் பாது காப்பை ஒழிக்கிறது. மாணவர்கள்-நுகர்வோர் என்றாகிவிட்ட பிறகு, இனி ஆசான்களின் பணி கார்ப் பரேட் கம்பெனியில் ஹெச்.ஆரைப் போன்று அடிமை களிடம் வேலை வாங்கும் கங்காணிகளாக இருக்க வேண்டியதுதான். இந்த வகையில் புதிய கல்விக் கொள்கை ஆசிரியர்களுக்கான நிரந்தரப்பணியை ஒழித்து, ''புரோபேசனரி'' கட்டத்தை ஐந்து வருடங் களாகவும் பயோமெட்ரிக் வருகைப்பதிவையும் முன் வைக்கிறது. டிஜிட்டல் இந்தியா, மூக்ஸ் போன்ற திட் டங்கள் இதை துரிதப்படுத்துகிற அதே வேளையில், புதிய கல்விக் கொள்கை 'இந்தியாவில் கற்பித்தல்' (Teach In India) மூலமாக வெளிநாடுகளிலிருந்து ஆசிரி யர்களையும் பல்கலைக்கழகங்களையும் இறக்குமதி செய்வதற்கு 'கியான் திட்டத்தை (Global Initiative of Academic Network - கல்விசார் வலைப்பின்னல்களுக் கான உலகளாவிய முன்முயற்சி)' செயல்படுத்த முனைகிறது. புதிய கல்விக் கொள்கையைப் பொறுத்த

வரை வருங்காலத்தில் ஆசிரியர்கள் இந்தியா வில் அருகிவரும் உயிரினமாக இருப்பார்கள் என்பதே இதன் சாரம்!

இந்திய உயர்கல்வியானது தற்பொழுது வரை நாட்டின் பெரும்பான்மையான மக் களுக்கு சாதி மற்றும் பொருளாதார ரீதியாக மறுக் கப்பட்ட, மூடுண்ட அமைப்பாகத்தான் இருக் கிறது. புதிய கல்விக் கொள்கை இதை மேலும் சுருக்கி, உயர் கல்வியிலிருந்து மக்களை கீழ் கண்ட வழிகள் மூலம் அணுகமுடியாதபடி தடுத்து வைக்கிறது.




கல்வியைப் பண்டமாகவும், மாணவனை நுகர்வோனாகவும் மாற்றும் காட்ஸ் ஒப்பந்தத்தை எதிர்த்து அனைத்திந்திய பல்கலைக் கழக மற்றும் கல்லூரி ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் டெல்லியில் நடைபெற்ற பேரணி.

- கல்வி கற்பதற்காக வழங்கப்பட்டு வந்த உதவித் தொகைகள் இரத்து செய்யப்படுவதுடன், இட ஒதுக்கீடும் இரத்து செய்யப்படுகிறது. 1% கல்வியில் சிறந் தவர்கள் மற்றும் 1% பொருளாதார ரீதியாக பின்தங்கிய வர்களுக்கு மட்டுமே உதவித்தொகை என அறிவிக் கிறது. இத்தகைய உதவித் தொகைகளும் கார்ப்பேரட் பொறுப்புணர்வின் (Corporate Social responsiblity) கீழ் வரவைக்கப்படுவதன் மூலம் பெரு முதலாளிகளிடம் கையேந்த வைக்கிறது! நாட்டின் எரிசக்தி வளங்களைக் கையகப்படுத்தியிருக்கும் அம்பானி போன்ற முதலாளி கள் தாங்கள் கொள்ளையடித்த இலாபத்தில் CSR என்ப தன் பேரில் அற்பத் தொகையைக் கூட தனது மருத்துவ மனையிலேயே முதலீடு செய்வதைப் பொருத்திப் பார்த் தால், CSR சுட்டிக்காட்டும் இந்த அரசு எப்படி ஓர் தேர்ந் தெடுத்த தரகனாகச் செயல்படுகிறது என்பது எளிதில் தெரியும்.

- ஐ.ஐ.டி., என்.ஐ.டி. போன்ற உயர்கல்வி நிறு வனங்கள் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுகிறது. இங்கு நடைபெறும் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு தனி யாரிடமிருந்து நிதி பெற்றுக்கொள்ள வேண்டுமெனக் கூறுகிறது புதிய கல்விக் கொள்கை. இதற்கு வசதியாக ஆட்சிமன்றக் குழுவில் கார்ப்பேரட்டுகளின் பங்களிப்பு இருக்கும்படி பார்த்துக் கொள்கிறது. ஏற்கனவே எல்லா ஐ.ஐ.டி.க்களும் அப்படித்தான் இருக்கின்றன என்பது கவ னிக்கத்தக்கது!

- அனைத்து சி.எஸ்.ஐ.ஆர். ஆய்வு நிறுவனங்களுக் கான நிதி ஒதுக்கீடு இனி தனியாரிடமிருந்து பெறப்பட வேண்டுமென்கிற புதிய கல்விக்கொள்கையின் சரத்து மோடி அரசால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

- இதுவரை ஆராய்ச்சித் திட்டங்களில் உருவாக்கப் பட்ட ''கிளினிக்கல் டிரையல்ஸ்'' தரவுகள் மற்றும் கண்டு பிடிப்புகள் பொதுமக்கள் அணுக முடியாத வண்ணம் அறிவுசார் சொத்துரிமை (Intellectual property rights) விதி களின்படி அமல்படுத்தப்பட இருக்கிறது. உலக மேல் நிலை வல்லரசான அமெரிக்காவிலேயே மக்களின் நீண்ட நெடிய போராட்டத்தின் காரணமாக, செனட்டில் இதற்காக தரகு வேலை பார்த்த Elsevier என்ற பன் னாட்டு அறிவியல் பதிப்பகம் பின்வாங்க நேர்ந்தது நினைவிருக்கலாம். ஆனால், இங்கோ வளர்ச்சி, விகாஸ் எனும் பெயரில் அப்பட்டமான வேசைத்தனமே IPRஐப் பொறுத்தவரை மோடி அரசால் அரங்கேறிக்கொண்டிருக் கிறது.

இவ்விதம் புதியக் கல்விக் கொள்கை, ஏகாதிபத்தியத் திற்கு நாட்டை மறுகாலனியாக்குவதைத் துரிதப்படுத்து வது மட்டுமல்ல, மத்தியில் வீற்றிருக்கும் இந்துத்துவ கும்பலுக்கும் கலாச்சார பாசிசத்தையும் பார்ப்பன மேலாண்மையையும் அமல்படுத்துவதற்கு எந்திரமாக அமைந்திருக்கிறது.

கலாச்சார ஒருங்கிணைப்பு என்பதன் பெயரில் இந்துத் துவக்காலிகள் புதிய கல்விக் கொள்கையில் செத்த மொழி களை மீட்டெடுக்கும் ஆய்வு நிறுவனங்களை அமைப்பது, பார்ப்பனியக் கலாச்சாரத்தை இந்தியக் கலாச்சாரமாக நிலைநிறுத்தும் இந்தியவியல் (Indology) ஆய்வுகளை மேற்கொள்வது உட்பட பல பரிந்துரைகள் புதியக் கல்விக் கொள்கையில் நிறைந்திருக்கின்றன.

சகல திசைகளிலும் இந்தியக் கல்விக் கட்ட மைப்பைப் பிய்த்தெறியும் புதியக் கல்விக் கொள்கை அமல்படுத்தப்படுகிற பொழுது, இதை எதிர்க்கிற உரி மையை நாடாளுமன்றத்திடம் இருந்தும் இந்திய நீதி சட்ட இறையாண்மையிலிருந்தும் WTO&GATS முற்றிலும் பறித்துவிடுகிறது.

காட்ஸ் ஒப்பந்தத்தின்படி, கல்விப்புலத்தில் உரு வாகும் பிரச்சினைகள் அதற்கென அமைக்கப்பட்ட ஒழுங்குமுறை தீர்ப்பாயங்களிலே மட்டுமே தீர்த்துக் கொள்ள முடியும். இதில் மாணவர்கள், தொழிலாளிகள், சமூக ஜனநாயகக் குரல்கள் முடிவெடுக்கும் அங்கத் தினராக இருக்க முடியாது!

இப்படிப்பட்ட ஏகாதிபத்தியம்-பார்ப்பனியம் என்ற வீரிய 'ஒட்டுரக'த்தின் அப்பட்டமான வெளிப்பாடாகத் தான் புதிய கல்விக் கொள்கை இருக்கிறது.

ஆக, ஏகாதிபத்திய நலனையும், பார்ப்பனிய மேலா திக்க நலனையும் பிரதிபலிக்கும் 'புதிய கல்விக் கொள் கையை' வீழ்த்தி, சுயசார்புள்ள, உண்மை தேசப்பற்றாளர் களை உருவாக்கும் மக்களின் நலனுக்கான புதிய கல்விக் கொள்கையைப் படைக்க வேண்டுமானால், WTO&GATS ஒப்பந்தத்திலிருந்து இந்தியா வெளியேற வேண்டியது அவசியம்.

● பரிதி

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...



இந்நிலையில், மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜன நாயகத் தொழிலாளர் முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, பெண்கள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் மற்றும் மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினரை யும் தன்னார்வலர்களையும் ஒருங் கிணைத்து மக்கள் அதிகாரம் அமைப்பினர் வெள்ள நிவாரணப் பணிகளை மேற் கொண்டு வருகின்றனர். கூடவே அரசையும் நிவாரணப் பணிக்கு அழைத்து வர போராடுகின்றனர்.

கடலூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டு வீட்டிற்குள் சேறும் சகதியுமாக உள்ளதால் யாரும் செல்ல முடியாத உள்ள இடங்களுக்குச் சென்று வீடு மற்றும் சேதம் அடைந்த பகுதிகளைச் சீரமைக் கும் பணிகளில் ஈடுபட்டு வருகின் றனர், மக்கள் அதி காரம் அமைப்பினர்.



முதற்கட்டமாக கடலூர் புருஷோத்த மன் நகரில் தண்ணீர் புகுந்துள்ள வீடுகளைச் சுத்தம் செய்வது, சேறு படிந்துள்ள பாத்திரங் களைச் சுத்தம் செய்வது, கழிவுகளை அகற்றும் பணிகளைச் செய்வது, கால்வாய்களை சுத்தம் செய்வது, முட்புதர்களை அகற்றுவது போன்ற சீரமைப்பு பணி களைச் செய்தனர். வெல்லவேறு ஆற்றின் கரை உடைந்து ஊருக்குள் புகுந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கரையோர கிராமங்களான விசூர், பெரிய காட்டுப்பள்ளத் தில் மீட்பு பணியில் ஈடுபட்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், பிள்ளையார் பாளையம், ஓரிக்கை, திருக்காலி மேடு உள்ளிட்ட பகுதிகள் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின. ஆரம்பப் பள்ளியில் தங்க வைக்கப் பட்டிருந்த திருக்காலி மேடு அருந்ததியர் நகர் பகுதி மக் களுக்கு முறையான உணவு, குழந்தைகளுக்கு பால், போர்வைகள் போன்ற அத்தியாவசியமான பொருட்களைக் கூட விநியோகிக்காமல் நட்டாற்றில் விட்டுச் சென்றது மாவட்ட நிர்வாகம்.

அதிகாரவர்க்கத்தின் இத் தகைய அலட்சியத்தைக் கேள் விக்குள்ளாக்கியதோடு அம் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை உடனடி யாக கிடைக்க ஏற்பாடு செய் தனர் மக்கள் அதிகாரம் அமைப்பினர். இவை தவிர, வீட்டைச் சுற்றி வெள்ளநீர் சூழ்ந்துநிற்க, மின்சாரமின்றி, குடிநீரின்றி தவித்த மக்கள் மாவட்டத்தின் பல பகுதி களில் ஆங்காங்கே நடைபெற்ற தன்னெழுச்சி யான சாலை மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டு கோரிக்கையை நிறைவேற்ற அதிகாரிகளை நிர்பந்தித்தனர் மக்கள் அதிகாரம் அமைப்பினர்.

ஐய்யங்கார்குளம் கிராமத்தில் நாடார் தெரு, மீனவர் குடியிருப்பு உள்ளிட்ட பகுதிகள் தண்ணீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டபொழுது, உடனடியாக மக்களை காப்பாற்றும் விதமாக ஊர் தலைவரைத் தொடர்பு கொண்டு பள்ளியில் தங்க வைக்க மக்கள் அதிகாரம் அமைப்புத் தோழர்கள் உத்தர வாதப்படுத்தினார்கள். வேகவதி ஆற்றுநீரால் சூழப்பட்டு இடுப்பளவுக்குமேல் தண்ணீரால் மூழ்கடிக்கப்பட்டிருந்த காவலான்கேட் பகுதி மக்களை சந்தித்து நிவாரண பணிகளை மேற்கொண்டனர்.



சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மதுரவாயல், சேத்துப்பட்டு, எழும்பூர், மணலி, கும்மிடிப்பூண்டி, முடிச்சூர், எம்.ஜி.ஆர். நகர், ஜாபர்கான் பேட்டை மணலி உள்ளிட்ட பகுதிகளிலும் மற்றும் கடலூர் மாவட்டத்தில் பாதிப்பிற்குள்ளான கிராமங்களிலும் மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை அறிந்து இவ்வமைப்பினர் நிவாரணப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகின் றனர்.

- மக்கள் அதிகாரம், சென்னை மற்றும் கடலூர்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.



சென்னை



பெரிய காட்டுப்பாளையம், கடலூர் மாவட்டம்